Registered as a News Paper | பக்கங்கள்: 08 | விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 17 | (31-01-1992) | வெள்ளிக்கிழமை | ஓசை: 347

## மலையகச் சிறுவர்கள் அடிமைகளாக விற்பனை

மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்களைக் கடத்தி வந்து கொழும்பில் அடிமைகளாக விற்கும் புதுவகை வியாபாரமொன்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் ஊவாமாகாணத்தைச் சேர்ந்த பலசிறுவர்களைக் கடத்தி வந்து கொழும்பில் ரூபா 200 முதல் ரூபா 300 வரையில் விற்பதாகவும், கடைகள் மற்றும் வீடுகளில் சிற்றூழியம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் இவர்களின் மாதாந்த வேதனத்தை இவ்வாறு விற்றவர் சென்றுசேகரிப்பதாகவும் தெரியவருகின்றது. ( 8 ஆம் பக்கம் பார்க்க )

# தீவிரமாகிவரும் தாக்குதல்கள்

# அரச வட்டாரங்களில் அதிர்ச்சி

## புலிகளின் யுக்தியால் ராணுவம் குழப்பம்

(கொழும்பு)

கடந்த ஆறு வாரங்களாக வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் படையணிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் துணிகரத் தாக்குதல்களும், அதனால் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளும் சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுத பலம், ஆட்பலம் பற்றி இராணுவத் தரப்பின் கணிப்பீடு இந்த வெற்றிகரமான தொடர்தாக்குதல்களால் குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இதன் காரணமாக இராணுவத்தினர் ஒட்டுமொத்தமான போர்முறைத் திட்டம் மீள்பரிசீலனைக்கு ஆளாகியிருப்பதாக தெரிகிறது.

விடுதலைப் புலிகள் பெரும்பாலும் கிழக்கில் ஒடுக்கப்பட்டுவிட்டதாகவும், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கிழக்கின் பெரும்பாகமும்வந்துவிட்டதாகவும் கணிப்பீடுசெய்திருந்த சிறிலங்கா அரசாங்க, இராணுவ வட்டாரங்களுக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் புலிகள் கடந்த ஆறு வாரங்களாக (8ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலை படுகொலை; சிங்கள இராணுவமே பொறுப்பு

### ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

கொக்கட்டிச்சோலையில் அப்பாவி பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டமைக்கு அங்கு முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவமே காரணம் என இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்திய ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் சுருக்கத்தில் கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஆண்கள் மட்டுமன்றிப் பெண்கள் குழந்தைகள் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

பல கட்டடங்கள் எரிக்கப்பட்டன. மக்களின் பெறுமதி மிக்க பொருள்கள் சூறையா (8ஆம் பக்கம் பார்க்க)

## பழி தீர்ப்பதற்காக இராணுவம் 67 தமிழரைக் கொன்றது

- பிரேமதாசா

(கொழும்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் சென்ற ஜூன் மாதம் புலிகள் இரண்டு இராணுவத்தினரைக் கொன்றதினால் ஆத்திரமடைந்த படைகள் பழிவாங்கும்நோக்கிலேயே 67 தமிழர்களைக் கொன்றதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்.

சிறிலங்கா இராணுவம் வேண்டுமென்று செய்த படுகொலையே இது என்று ஜனாதிபதி நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் பற்றி விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட (8 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலை விபரங்கள் முழுமையாக இல்லை

(கொழும்பு)

இந்த இடைக்கால அறிக்கையில் அனைத்துத் தகவல்களும் முறையாக இடம்பெறவில்லை என்று மட்டக்களப்பில் விஷயம் தெரிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. கருத்து வெளியிட்டுள்ளது.

மேலும் கொக்கட்டிச் சோலையில் பல கிராமவாசிகள் என்னவானார்கள் என்பது இதுவரை தெரியவில்லை ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## சிறிலங்கா அரசாங்கம் எம்மிடம் கூறியது முழுப்பொய்

### மட்டக்களப்பில் கனேடிய நல்லெண்ணக் குழு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், மட்டக்களப்பு மக்கள் எதுவித பிரச்சினையும் இல்லாது சந்தோசமாக வாழ்வதாகவும் சிறிலங்கா அரசால் எம்மிடம் தெரிவிக்கப்பட்டது.ஆனால் அவை முழுப் பொய் என்பதை நேரில் அவதானிக்கும் போது எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## இரத்தினபுரியில் 24 மணிநேர கண்காணிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரிப் பகுதியில் இருக்கும் பெருந்தோட்டங்களில் இருபத்து நான்கு மணிநேர விழிப்பு நிலை பேணப்படுவதாகத் தெரிய வருகின்றது. சோதனைத் தடைமுகாம்கள், வீதித் தடுப்புகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகளைப் பொலிசார் தீவிரப்படுத்தியிருக்கும் அதேவேளை புதிதாக இப்பகுதிக்கு வரும் எவர் பற்றியும் முழுத் தகவல்களும் பெறப்பட்டு வருகின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பலவத்த இராணுவமுகாமில் கைதிகள் உண்ணாவிரதம்

பலவத்த இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்திவருவதாகவும், அவர்களது உடல் நிலை பலவீனப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இவர்களைப் பார்வையிட்ட மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர்கள் மேலும் தகவல் தருகையில் சுமார் எழுநூறு இளைஞர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், முறையான நீதிமன்ற உத்தரவு எது ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஜே. ஓ. சி. குண்டு வெடிப்பு 26 பேர் மீது குற்றப்பத்திரம்

கொழும்பு கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக இருபத்தாறு சந்தேக நபர்கள்மீது பொலிசார் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து வழக்குத் தொடரவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்த இருபத்தாறு பேரில் இருவர் பெண்கள். இவர்கள் மீது அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்தது, விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் தங்க இடமளித்தது, அனுமதியில்லாமல் வெடிபொருள்கள், ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. நா. அதிகாரிகள் பெப்ரவரியில் யாழ். வருகை

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலய உயர் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்தமாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய இருக்கின்றது.

இலங்கையின் வடபகுதிக்கு பொறுப்பாக கடமையாற்றும் இந்த ஸ்தாபனத்தின் உயர் அதிகாரி உட்பட நான்கு பேர் கொண்ட இக் குழுவினர் வடபகுதியில் தமது நடவடிக்கைகள் தொடர்பாக நிலைமைகளை ஆராய்வதற்காகவே இங்கு வருகின்றனர். தமது ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## சைக்கிள் குண்டுக்கு மூவர் பலி

காத்தான்குடியில் நேற்றுக் காலை சைக்கில்களில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூவர் பலியாகியதாக ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## மீனவர் மீது கலிபர் தாக்கு

பூநகரி - கல்முனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மீன ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## கதறியழும் தாய்மாரை மட்டக்களப்பில் கண்டோம்

(மட்டக்களப்பு)

கண்ணீர் மல்கிக் கதறியழும் தாய்மாரைச் சந்தித்து அவர்களது நிலைமைகளை அறிந்து கொண்டதோடு, சோக உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டோம். இவ்வாறு மட்டக்களப்புக்குச் சென்று கலந்துரையாடல்களை நடத்திய கனேடிய தூதுக்குழுவினர் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் உங்களது சோகமான முறைப்பாடுகளை நாம் உரிய அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு நீக்குவோமெனவும் கூறினர்.

## வரி விளம்பரம்

**ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH**

ஆங்கில இலக்கணமும் ஆங்கிலத்திற் பேசுதலும் 3 மாதப் பயிற்சி V. N. KANDASAMY, A.I.B PART I (LONDON) INTER (LONDON) இல. 87, கொக்குவில் — திருநெல்வேலி றோட் (பாலத்துக்கு அருகில்) கொக்குவில், (2161)

### தாதிகள் தேவை

யாழ் .நகரில் அமைந்துள்ள தனியார் வைத்திய சாலைக்கு பயில விரும்பும் பெண்தாதிகள் உடன் தேவை. 2-02-1992 அன்று காலை 9.00 மணிக்கு இல: 121/1,1/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சான்றிதழ்களுடன்நேரில் வரவும். (2162)

### தேவை

துட்புரவான வெள்ளை பூழுட்போத்தல்தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம்

(சி/3869)

### பெற்றுக் கொள்ளவும்

சி. துரைசிங்கம் என்பவரால் கோண்டாவில் உப்புமட பிள்ளையார் கோயிலடிக்கு முன்பாக கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## இந்தியாவிலுள்ள சிங்கள மீனவர்களை மீட்க நீரியல்வளஅமைச்சு முயற்சி

(கொழும்பு)

கரை ஒதுங்கி இந்தியாவில் தங்கியிருக்கும் சிங்கள மீனவர்களை இலங்கைக்கு திரும்பக் கொண்டுவரும் முயற்சியில் கடற்தொழில் நீரியல் வள அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இது பற்றி கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ஜோசப் மைக்கேல் பெரேரா மேலும் தெரிவிக்கையில், மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒன்பது படகுகளில் புறப்பட்ட நாற்பத்தியொரு மீனவர்கள் இந்தியக்கரையோரங்களான கொச்சி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கரைஒதுங்கினர்.

வென்னப்புவ, தொடுவாவ, உக்மிட்டியாவ பகுதிகளைச் சேர்ந்தவர்களான இம் மீனவர்களை இலங்கைக்குக் கொண்டுவருவதில் இருக்கும், சட்டம் மற்றும் பொருளாதார விடயங்களை தமது அமைச்சுக் கவனிக்கும் எனக் கூறினார்.

## பாடசாலை ஊழியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

பாடசாலைகளில் ஆசிரியரல்லாத ஊழியர்களின் வெற்றிடங்கள் வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் விரைவில் நிரப்பப்படவுள்ளன. பாடசாலைகளில் அமைய, தற்காலிக, சமயாசமய மற்றும் பதில் ஊழியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால்அனுப்பப்பட்ட கணணிப் பதிவு அட்டவணையில் ஒவ்வொரு கோட்டத்திலுமுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுமதிக்கப்பட்ட ஆசிரியரல்லாத ஊழியர்களின் ஆளணிஎண்ணிக்கை விபரம் தரப்பட்டுள்ளது. இந்த அட்டவணையின்படி ஒவ்வொரு கோட்டத்துக்கும் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் மாற்றம் செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பாடசாலைக்கு மேலதிகமான ஊழியர் தேவை என்று தீர்மானித்தால் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையிலிருந்து, அதே கோட்டத்தில் மற்றொருபாடசாலையில் நியமனம் பெறும் ஊழியருக்கு கோட்டக் கல்வி அதிகாரி இடம் வழங்கலாம்.

ஊழியர்கள் தொடர்பான விபரங்களை மாகாண அமைச்சுக்கு அனுப்பி வைக்கின்ற துரித கதியைப் பொறுத்தே குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்பதைக் கவனத்தில்கொள்ளுமாறு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

பல வருட இடைவெளிக்குப் பிறகு ஆசிரியரல்லாத ஊழியருக்கு நிரந்தர நியமனம் இப்போது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### குடும்பஸ்தர் கொலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிப்பு என்னும் இடத்தில் வயலுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

சின்னத்தம்பி இராசேந்திரன் (வயது 33) என்ற இக் குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் விசாரணை செய்து வருகின்றனர். (88)

### பொதுக்கூட்டம்

மருதனாமடம் கோட்டக் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை ஒன்பதுமணியளவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தற்காலிக ஆசிரியர் நியமனம் பற்றிக் கலந்துரையாடப்படவிருப்பதால் கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஜனசக்தி பற்றி வெனிசூலா ஆய்வு

இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் ஜனசக்தி வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றி வெனிசூலா அரசாங்கம் ஆய்வு செய்து வருகின்றது. இதற்காக விசேட தூதுக்குழுவொன்று இலங்கை வந்து பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இத் தூதுக் குழுவில் ஐந்து பேர் அங்கம் வகிக்கின்றனர்.


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் - யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஓரே நிறுவனம்)

O\L

- மாலை நேர வகுப்புக்கள் (மாலை 3மணி முதல் 6மணி வரை)
- பகல் நேர வகுப்புக்கள் (காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)
- சனி, ஞாயிறு வகுப்புக்கள் (காலை 8 மணி முதல் பி. ப. 2 மணி வரை)


புதிய பிரிவுகள்

**ஆரம்பம்: 1 - 2 - 92**

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த போதனை.

★ கடமை, கட்டுப்பாடுடன் நடாத்தப்படும்.

(சி-3863)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 27. 09. 1917

இறப்பு: 02. 01. 1992

I S. அந்தோனிராஜா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்டு, எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர்விட்டு எரிந்து அணைந்த ஒளி விளக்கே, எங்களை ஓங்க வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 1 ஆம் திகதி (சனிக்கிழமை) அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் மாலை 5 மணிக்கும், யாழ் புனிதயுவானியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கும், வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 7 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(2158)


### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதான விரிவாக்க நிதி சேகரிப்பு

எமது சங்கத்தினால் நடாத்தப்படும் மேற்படி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 1992-03-01 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக் கல்லூரி

(சி/3870)




### மில்க்வைற் சலவைத்தூள்

உங்கள் சலவையைத் துரிதமாகவும், தூய வெண்மையாகவும் செய்கிறது

50 கிறாம் பைக்கற்
ரூபா 5/- மட்டுமே

(சி-3868)


## நினைவு கூருகின்றோம்...

**1992-01-31**

வீரவேங்கை
ரவியன்



1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மடுக்கந்தை முகாமில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1987ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். ஜெனா** [ நாகலிங்கம் சிவகுமார்- 6ஆம்வட்டாரம், நயினாதீவு ]

**கண்ணன்** [ தியாகராசா சிவயோகன் - தம்பசிட்டி, பருத்தித்துறை ]

**வெள்ளை** [ தில்லையம்பலம் தேவராஜா - அல்வாய் ]

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரின் முற்றுகையில் வீரச்சாவெய்திய

**ரவியன்** [ கணேசலிங்கம் ரவிச்சந்திரன் - பிள்ளையார் கோயிலடி. கட்டுவன் ]

1989ஆம் ஆண்டு வதிரியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன்

1991ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது வீரச்சாவெய்திய

**வசிட்டன்** [ கணேசபிள்ளை அருணசேகரன் - கோண்டாவில் கிழக்கு ]

கொழும்பு செல்வதற்காக காத்துநின்ற பொதுமக்கள் மீது வவுனியா காவலரணிலிருந்து சிறிலங்கா இராணுவம் சுட்டதில் பலியான ஒருவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3867)




தமிழ்த்தேசிய எழுச்சியானது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த போது ஆங்காங்கே உள்ள இளைஞர்கள் தமது சக்திக்கேற்றவாறு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு புறப்பட்ட இளைஞர் குழு ஒன்றில் தான் கஜனும் அங்கம் வகித்தான். அக்குழுவில் பயஸ், முத்துச்சாமி, உமாராம் போன்ற பல இளைஞர்கள் அங்கம் வகித்தனர். இளைஞர்களைத் திரட்டி தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய கருத்துக்களைப் பரப்பிக்கொண்டிருந்தது இக்குழு

1983 ஆம் ஆண்டு ஜூலையில் நிகழ்ந்த இனக்கலவரங்களைத் தொடர்ந்து எமது போராட்டம் அடைந்த திடீர் வளர்ச்சியைக்கண்டுஅச்சமடைந்த சிறிலங்கா அரசு தமிழ் பேசும்விவசாயிகளிடம்இருந்த துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கும்படி கட்டளையிட்டது.

இவ்வாறு மீளப்பெறப்பட்ட துப்பாக்கிகள் கச்சேரிகள் மூலமாக சிறிலங்கா காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்குப் பயன்பட்ட இத்துப்பாக்கிகள் அநேகவிட மோசமான சிங்களக்குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்டன. விலங்குகளால் பயிரழிவு மட்டுமே ஏற்பட்டது. இவர்களால் ஏற்படவிருப்பது இனஅழிவு என்பதைப்புரிந்து கொண்ட கஜனும் அவனது நண்பர்களும் இத் துப்பாக்கிகளைக் கைப்பற்றத் தீர்மானித்தனர்.

நாற்புறமும் ஆற்றினால் சூழப்பட்ட புளியந்தீவு எனப்படும் மட்டக்களப்பு நகரினுள் ஆற்றங் கரையோரமாகவுள்ள ஒல்லாந்தர் கோட்டையினுள் அமைந்துள்ளது மட்டக்களப்புக் கச்சேரி. புளியந்தீவுக்குப் போகும் பாலத்தின் அருகே மட்டக்களப்பு காவல்நிலையம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு காவல் நிலையத்துக்கும் கச்சேரிக்கும் இடையிலுள்ள தூரம் குறுக்காகப் பார்த்தால் சுமார் 500யார்கள் தான். மட்டக்களப்புநகரினுள் செல்பவர்கள் எப்படியும் பொலீஸ்நிலையம் முன்பாகத்தான் செல்ல வேண்டும் என்ற நிலையில் கச்சேரிமிகப்பாதுகாப்பானஇடம் என சிறிலங்காஅரசினால் தருதப்பட்டுவந்தது. எனினும் சில தினங்களில் இத் துப்பாக்கிகளை சிறிலங்கா காவல்துறை பொறுப்பேற்கவிருந்தது.

இந்நிலையில் தோணிகள் மூலமாக ஆற்றின்வழியாக கச்சேரியையடைந்தனர் கஜனும் அவனது நண்பர்களும். இத்திட்டத்தில் சிறு தவறு நிகழுமாயின் தாம்அனைவரும் உயிர் தப்பமுடியாது என்பதுஅவர்களுக்குத் தெரியும். ஆனாலும் போராட்டத்தின் வளர்ச்சிக்காக அந்தநிலைமையை எதிர்கொள்ள அவர்கள் தயாரானார்கள். அத்திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறியது.

ஆற்றின் வழியாக சுமார் எட்டு மைல்கள்தூரம் துடுப்பினால் வலித்தபடியே இத்துப்பாககிகளைக் கொண்டு சென்றனர். இதற்குள் பொழுதுவிடிந்து விட்டது. ஆற்றங்கரைகளில அவற்றைப் புதைத்தனர்.



லெப்
மொட்டை கஜன்

மீண்டும் இரவு நேரம் அவற்றைக் கிண்டியெடுக்கத் தீர்மானித்தனர். இளைஞர்கள் வந்து இறங்கியதையும் இரவு நடந்த சம்பவத்தையும்கேள்விப்பட்ட புளொட்குழுவினர் ஆற்றங் கரைவழியே மோப்பம் பிடித்துத் திரிந்தனர். இவர்களால் புதைக்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களைக் களவாடினர். உயிரைப் பணயம் வைத்து எடுக்கப்பட்ட ஆயுதங்களை களவாடிய இக்குழுவினரை விஷயம்தெரியாத மக்கள் சோறுகொடுத்து வாழ்த்தி அனுப்பினர்.

இரவுநேரம் வந்ததும் இவர்கள் தங்கள் ஆயுதங்களைத் தேடினர் புதைத்த ஆயுதங்களை எடுத்தவர்களை தேடினர். அச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட புளொட்உறுப்பினர்கள் இந்தியாவுக்குத் தப்பியோடினர். அங்கே சென்று கச்சேரியில் இருந்து துப்பாக்கிகளைக் கைப்பற்றிய சம்பவத்திற்கு உரிமை கோரினர்.

இந்நிலையில் இந்த ஆயுதங்களைக்கொண்டு மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் வாகனத்தில் சென்ற புளொட் உறுப்பினர்கள் சிலர் கைதாகினர். கைதாவதற்கு முன் அவற்றினால் சண்டை பிடிக்க முடியும் என்பதைக் கூட மறந்து போயினர். காவல் நிலையத்தில் அனைத்து உண்மைகளையும் சொல்ல மட்டும் அவர்கள் மறக்கவில்லை. அதனால் கஜனும் அவனது நண்பர்களும் சிறிலங்காப் படையினரால் தேடப்பட்டனர். இந்நிலையில் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டனர்.

பொன்னம்மானின் பயிற்சியில் இவர்கள் புடம் போடப்பட்ட தங்கங்களாயினர். மீண்டும் களத்தில் கால் வைத்தனர். யாழ். பொலிஸ் நிலையத்தாக்குதல் உட்பட குடாநாட்டில் நிகழ்ந்த பல்வேறு தாக்குதல்களில் பங்குபற்றினர். முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ முகாம் தாக்குதலான கொக்கிளாய்த் தாக்குதலிலும் பங்குபற்றினர். மீண்டும் மட்டக்களப்பு பிரதேசத்தை நோக்கிப்பயணமாகினர்.

யாழ்ப்பாணத்திலிருந்துமட்டக்களப்பு செல்லும் குழுவினர் வழி வழியே தாக்குதல்களை நடத்திச் செல்வது வழக்கம். அவ்வாறே மூதூரில் தங்கியிருந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் கவசவாகனம் ஒன்றினை கண்ணிவெடிமூலம்தகர்த்தான் கஜன். இத்தாக்குதலின் மூலம் கிடைத்த ஆயுதங்களும்முதன் முதலாக கிடைத்த -303 ரக L. M. Gயும் அடங்கும்.

மட்டக்களப்புக்குச் சென்றடைந்ததும் தங்களால் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளைக் களவாடிக் கொண்டு தப்பித்தவர்களைக் கண்டான். அவனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டுவந்தது. ''பிரச்சினை இன்னும் தீரவில்லை நாங்கள் ஒரு விருப்பாத சூழ்நிலையில் சந்திக்க வேண்டி வரும்'' என்று சொன்னான். இயக்கக்கட்டுப்பாடு கருதி மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் அவன் ஈடுபடவில்லை.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தாக்குதலின் போதும் ஒரு குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்றான். அத்தாக்குதல் மூலம் கிடைக்கப்பெற்ற ஆயுதங்களை அணைத்தபடியே ஆனந்தக் கூத்தாடினான். இந்த விடயத்தில் அவன் சிறு பிள்ளைதான். தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க அவனுக்கு வேறுவழி தெரியவில்லை.

மட்டக்களப்பில் இயக்கத்தின் உணவுத் தேவையையும் பொருளாதாரத் தேவையையும் கருதிமேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கையில் கூடியளவு அக்கறை காட்டினான். இரவுபகல் வித்தியாசமில்லாமல் உழவு இயந்திரத்துடன் உழைத்துக்கொண்டிருந்தான். ஆனாலும் போர்க்களங்கள் என்றால் அங்கு செல்வதற்குத் துடியாய்த்துடித்தான்.

இறுதியில் 27-06-86 அன்று புலிபாய்ந்தகல்லில் நிகழ்ந்த இராணுவ முற்றுகை இவனை எம்மிடமிருந்து பிரித்தது. எமதுமுகாமை முற்றுகையிடுவதென்றால் அது இலேசான காரியமல்ல என்பதை உணர்த்திவிட்டே மடிந்தான்

'புலிபாய்ந்த கல் -
இந்தப்பெயர்
உனக்குப்
பிடித்திருக்கும்'

என்று புலிகளைப் பார்த்துக் கிண்டல் செய்தனர் சிலர். அந்தப்பெயர் மட்டுமல்ல அந்த மண்ணும் எனக்குப் பிடித்திருக்கிறது; ஆதலால் தான் இந்த மண்ணைப்பிரியத் தயாரில்லை என்று வெற்றுத் தோட்டாக்களுக்கு மத்தியில் கிடந்த அவனது புகழுடல் பறை சாற்றியது.

# எதிர்கால உணவுத் தேவைக்கு கடலின்பங்களிப்பு அதிகமாகஇருக்கும்

அது ஒரு இருண்ட உலகம். உண்மையிலேயே இருண்டது தான். சிறு சிறு ஒளிப்பொட்டுகள் தான் அங்கு தென்படும். ஆனால் அவ்வளவு இருளும் ஏராளமான மூலவளங்களை மூடி வைத்திருப்பதால் தொடர்ந்தும் அதனை ஓர் இருண்ட பகுதியாக வைத்திருக்க மனிதன் சம்மதிக்கமாட்டான். அவனது பெருக்கமும் தேவைகளின் அதிகரிப்பும் அந்த உலகத்தை வெளிச்சத்திற்கு இட்டு வந்துவிடும் என்பது நிச்சயம்.

பூமியின் 71 சதவீதமான பகுதி நீரினால் மூடப்பட்டுள்ளது; மிகுதி 29 சதவீதத்திலும் பெறப்பட்ட மூலவளங்கள் குறைந்து கொண்டு வருகையில் இப்பகுதியை நோக்கி மனிதன் கவனம் சென்றுள்ளது. ஒரு காலத்தில் இருண்ட கண்டம் எனவர்ணிக்கப்பட்ட ஆபிரிக்காவில் பொன்னும் வைரமும் பல்வேறு மூலப்பொருள்களும் எவ்வாறு கொட்டிக்கிடந்தனவோ அதேபோல் கடலும் ஏராளமான வளங்களைக் கொண்டதாக காணப்படுகிறது.

அதிகரித்து வரும் மனித இனத்தின் உணவுத்தேவையை எதிர்காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய வல்லமை கடலுக்கு மட்டுமே உண்டு. நிலப்பகுதி வாழ்விடமாக வெகுவிரைவாக மாறிக் கொண்டு வருகிறது. அப்பகுதியில் காணப்படும் சக்தி வளங்களும் வெகுவிரைவாக குறைந்து கொண்டே போகிறது. எனவே மாற்று இடங்களை தேடும்போது முக்கிய பங்கை வகிக்கப் போவது கடலாகும்.

பூமியில் நீரினால் மூடப்பட்டுள்ள பகுதியை அவற்றின் ஆழங்களைக் கொண்டு கடல் (Sea) சமுத்திரம் (Ocean) என இரு பகுதிகளாக புவியியலாளர்கள் பிரித்துள்ளனர். இவற்றில் சமுத்திரங்களே பெரும்பகுதியாக இருக்கிறது. பூமியின் 60 சதவீத பரப்பை சமுத்திரங்கள் எடுத்துக் கொள்கின்றன. இவை ஒரு தொடர்ச்சியான பரப்பைக் கொண்டுள்ளன.

சமுத்திரங்களில் காணப்படும் வளங்களில் மிகக்குறைந்த அளவு பகுதியே தற்பொழுது பவிக்கப்படக்கூடியதாக உள்ளது. இவற்றினை நாம் முழுமையாக உபயோகிப்பதாயின் பெரிய அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

சமுத்திரங்களில் ஒருலட்சத்து 50 ஆயிரம் வகையான உயிரினங்கள் உள்ளன. மீன் இனங்கள் 16,000 உள்ளதாகவும் 20 ஆயிரம் தாவர வகைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வருடாந்தம் உலகில் பாவிக்கப்படும்மீனின் அளவு கடலிலுள்ள மீன்வளத்தின் 1.5 சதவீதம் மட்டுமே என தெரிவிக்கப்படுகிறது.

கடல்நீரில் காணப்படும் இரசாயன மூலப்பொருள்களின் எண்ணிக்கை 104 எனவும் அவற்றில் 64 மட்டுமே தற்பொழுது பிரித்தெடுக்கப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. கடல்நீரில் காணப்படும் முக்கியஇரசாயனப்பொருள்சோடியம் குளோரைட்டு எனப்படும் கறி உப்பாகும். கடல் நீரில் 78 சதவீதம் உள்ளது. கறி உப்பை கடல்நீரிலிருந்து பிரித்தெடுக்கும் முறையை சீனர்கள் கி. மு. 1000ஆம் ஆண்டில் தெரிந்து வைத்திருந்தார்கள் என தெரியவருகிறது.

சமுத்திரங்களின் தரைப் பகுதி பல மூலவளங்களையும் சக்தி வளங்களையும் கொண்

**- வேலவன் -**

டுள்ளது. பலகோடி வருடங்களாக பூமியின் நிலப்பரப்பின் மேல் ஓட்டிலிருந்து நீரினால் அரித்துச்செல்லப்பட்ட துகள்கள் சமுத்திரத்தின் அடியிலேயே படிந்துள்ளன. இப்படிவுகளை ஆராய்வதன் மூலம் பூமியின் சரித்திரத்தையே அறிய முடியும் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

சமுத்திரத்தின் தரையமைப்பு சமவெளியை மட்டும் கொண்டதல்ல. பெரும் அகழிகள், பள்ளங்கள் கடற்குன்றுகள், எழுச்சிகள், மலைத் தொடர்கள் என பல்வேறு அமைப்புகளையும் கொண்டதாக காணப்படுகிறது. 'கடல் மலைத்தொடர்கள்' 1000மீற்றர் தொடக்கம் 5000 மீற்றர் வரை உயரம் உடையதாக காணப்படுகிறது.


இந்து சமுத்திரத்தில் இத்தகைய மலைத்தொடர் ஒன்று காணப்படுகிறது. இது இந்து சமுத்திரத்தை கிழக்கு மேற்கு பகுதிகளாக பிரித்துச் செல்கிறது. தலை கீழாக வைக்கப்பட்ட 'Y' வடிவத்தில் இந்த மலைத்தொடர் காணப்படுகிறது. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு உயரங்களையுடைய மலை உச்சிகளைக் கொண்டு காணப்படும் இத்தொடர் மாலைதீவு லட்சதீவுகளுக்கு அருகில் ஆரம்பமாகி தெற்கு நோக்கிச் செல்கிறது. மலையின்உச்சிகள் நீர்ப் பரப்புக்கு மேலே தலைநீட்டிக் கொண்டிருக்கும் சில இடங்களும் உள்ளன. சாகோஸ். சென்போல். கொர்குயலன் போன்ற தீவுகள் கடலுக்கடியில் காணப்படும் மலைத்தொடரின் சில உச்சிகள் ஆகும்.

அண்மைக் காலம்வரை ஆழ் கடல்களைப்பற்றிய ஆய்வுகள் யாவும் மனிதனின் ஆராயும் அறிவை மட்டுமே திருப்திப்படுத்தி வந்தது. இப்பொழுது அந்த நிலைமை மாறி தேவைகளுக்காக ஆராயும் நிலை வந்துள்ளது. இந்த நிலைமையில் பல்வேறு நாடுகளும் இந்த ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கி உள்ளன.

கடலின் அலைகளைப் பற்றியும், ஆழத்தைப் பற்றியும், அதன் வளங்களைப் பற்றியும் ஆராய்ந்தறிவது இலகுவானது ஒன்றல்ல. ஓயாது இயங்கும் கடல் அலைகள் மீது மிதந்த வண்ணம் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வது இயலாத காரியம். இதற்கென விசேட மிதக்கும் கப்பல்கள் (Flip) பயன்படுத்தப்படுகிறது.

இக் கப்பல்கள் தனியாக இயந்திரம் எதையும் கொண்டிராத ஓர் அமைப்பாகும். இதனைவேறு கப்பல்கள்மூலம் இழுத்து வந்து குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்படும். பின்னர் இக்கப்பலின் ஒரு முனையிலுள்ள மூடப்பட்ட தொட்டிகள் நீரினால் நிரப்பப்படும்

(6ஆம் பக்கம் பார்க்க)



# சற்றே தள்ளியிரும் பிள்ளாய்...

- இளையவன் -

தில்லையில் ஆடும் சிதம்பர நடராசனைக் கண்டு தரிசிக்கவேண்டும்.

வாழ்க்கையில் ஒரு தடவையாவது ஒற்றைக் காலைத் தூக்கி ஆனந்த நர்த்தனமிடும் தில்லை நடராசனைத் தரிசித்து விடவேண்டும்.

நாளுக்கு நாள் நந்தனிடம் ஆவல் மிகுந்தது. ஆர்வம் பெருகியது. பக்தி வெள்ளத்தை மெல்ல மெல்ல வளர்ந்து ஒரு வெறியாகவே பரிணமித்து விட்டது. இனியும் அடக்க முடியாது என்ற நிலையில் பக்திப் பிரவாகத்தால் உந்தப் பட்டவனாக நந்தன் ஆண்டையிடம் சென்றான். தில்லைக்கு சென்று நடராச தரிசனம் பெறும் ஆவலை வெளியிட்டான்.

அவனை ஒரு விதமாகப் பார்த்த ஆண்டை, 'உனக்கும் இந்த ஆசை வரலாமோ? இது தகுமோ? இது முறையோ?' என்று வானத்துக்கும் பூமிக்குமாக துள்ளிக் குதித்தார். இது உனக்கு மட்டுமல்ல உன் போன்றவர்களுக்கே வரக் கூடாத ஆசை என்று முழக்கினார்.

நந்தனிடம் குடி கொண்டிருந்த பக்தி என்ன இலேசானதா? ஆண்டை சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு பேசாமல் விடுவதற்கு. வாதாடினான் ஆண்டையோடு போராடினான். நான் 'சிதம்பர தரிசனம்' காணச் சென்றே தீருவது என்று சூள் கொட்டினான் ஆண்டை சற்று இறங்கி வந்தார்.

சிதம்பரம் தானே செல்லவேண்டும். அனுமதி தருகிறேன். ஆனால் அதற்கு முன்பாக என் விளைநிலம் அனைத்தும் சாகுபடி செய்து நெல் அனைத்தையும் மூடைகளாக்கி என் வீட்டிலே கொண்டுவந்து அடுக்க வேண்டும். அதற்குப் பின்பாக நீ சிதம்பரம் செல்லலாம்.

ஆண்டையின் கூற்று நந்தனுக்கு ஒருவித திருப்தி தந்தது.

நாளைசிதம்பரம் போவேன் நானே' என்று ஆனந்தக் கூத்தாடியபடி வீடு வந்து சேர்ந்தான்.

★ ★ ★

சூரியன் உச்சிப் பொழுதை எட்டிக் கொண்டிருக்கும் சமயம். பச்சைப் பசேலென செழித்து வளர்ந்திருந்த நெற்பயிர்களுக்கு களைகொல்லி மருந்து தெளித்துக் கொண்டிருந்தான் கோபாலன். இந்தப் பயிர்அறுவடை முடியும்போது தனக்கு கிடைக்கக்கூடிய வருவாய் பற்றி எண்ணி அவன் மனம் கும்மாளமிட்டது இப்பொழுது சூடலைப்பருவத்தை எட்டி நிற்கும் இந்த நெற்பயிர்கள் இன்னும் சில நாட்களில் கதிர் தள்ளும். அதன் பிறகு பூத்துக்காய்த்து நெல் மணியாகும். இம்முறை மழை நன்கு பெய்துள்ளதால் குளத்தில் நீர்முட்டி நிற்கிறது ஆதலால் தண்ணீர் பஞ்சம் வந்து பயிர் சாவியடித்துப் போகும் வாய்ப்பு இல்லை என்றவாறான கற்பனைகளில் மனது மிதக்க மருந்து தெளிக்கும் பம்பியின் கைப்பிடியை மேலும் கீழும் அசைத்து மருந்து தெளித்துக் கொண்டிருந்த கோபாலன் தற்செயலாக வானத்தை அண்ணாந்து பார்த்தான். ஹெலிக்கப்டர் ஒன்று செட்டைகள் படபடக்க மிக உயரத்தில் பறந்துகொண்டிருந்தது. மனம் ஒரு கணம் திக்கென்றது. அப்படியே வைத்த கண் வாங்காமல் விறைத்தபடி நின்றான். சடசடத்துத் திரும்பிய அந்த ஹெலிக்கப்டர் தொடர்ச்சியாக சில நிமிடப் பொழுதுகள் வேட்டுக்களைத் தீர்க்கும் சப்தம் கோபாலனுக்கும் தெளிவாகக் கேட்டது. மீண்டும் ஒரு வட்டமடித்துவிட்டு அது செல்லும் திக்கையே வெறித்தபடி பார்த்தான். நாசமறுவான் சுட்டுப் போட்டுப் போறான். ஆராருக்கு என்னென்ன பாடோ. உதடுகள் முணுமுணுக்க தன் வேலையில் மீண்டும் கவனமானான்.

சுமார் அரைமணி நேரம் கழிந்திருக்கக்கூடும். பம் வெறுமையாகிவிட்டது. அடுத்த தடவை மருந்து கரைக்க வென்று வாய்க்கால் கரையை நோக்கி நடந்து கொண்டபோது தூரத்தில் வயல் வரம்புகளுக்கு ஊடாக ஒரு மனித உருவம் ஓட்டமும் நடையுமாக வருவதை அவதானித்தான். நிதானித்துப் பார்த்தான். ஆளை மட்டுக்கட்ட முடியவில்லை. அவன் தன் வேலையை முடித்துவிட வேண்டுமென்ற ஆவலில் அதில் மூழ்கினான்.

வாய்க்காலில் ஓடி வரும் நீரை அள்ளிப் பம்பியினுள் ஊற்றி களைகொல்லி மருந்தையும் கலந்து விட்டான்.

கோலில் கொழுவும் வாரை இருகைகளிலும் கோர்த்தபடி முதுகை வளைத்து பம்மை முதுகில்சாய்த்து ஓரிருதடவை கைப்பிடியையும் அசைத்துப் பார்த்துவிட்டு மீண்டும் வயலினுள் இறங்கினான். கைப்பிடியை மேலும் கீழும் அசைத்து மருந்து தெளிப்பதில் மும்முரமாகிக் கொண்டிருந்த வேளை 'அண்ணை அண்ணை' அவசர அலுவல் குரல் கேட்டது திரும்பினான். ஆறுமுகம் அரக்கப் பரக்க விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

கோபாலன் வரம்புக்குதாவி ஏறினான் 'என்னடப்பா என்ன பிரச்சினை'

'அண்ணை இப்பஹெலி சுட்டதில உன்ரை மூத்தவனுக்கு காலில பெரிய காயம். அக்கராயன்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகினம்' ஆறுமுகம் பெரிய குரலெடுத்துக் கூறினான்.

பம்ப்போன திசை கோபாலனுக்குத் தெரியவில்லை. ஓட்டமாய் ஓடிச் சென்றான்.

வயதுக்கு அப்பால் வேலியோரமாக பாலைமர நிழலொன்றில் சாத்தப்பட்டிருந்த சைக்கிளில் தாவி ஏறினான். ஸ்கந்தபுரத்திலிருந்து அக்கராயன் குளம் வரை செல்லும் தார்ச்சாலைக்கு மின்னல் வேகத்தில் வந்து சேர்ந்தான். அக்கராயன் குளம் ஆஸ்பத்திரிக்கு சில நிமிடங்களிலேயே அவன்வந்துசேர்ந்துவிட்டான். ஆனாலும் அதற்கும் முன்பாகவே காயப்பட்டவர்களை ஏற்றிவந்த 'பிக்கப்' வாகனம் கிளிநொச்சி சென்று விட்டதாக தகவல் சொன்னார்கள். அதிலும் வீட்டில் நின்று விளையாடிக் கொண்டிருந்த பதின்நான்கு வயதுச் சிறுவன் ஒருவனுக்கு பலத்த காயம். அவனை யாழ்ப்பாணம் தான் கொண்டுபோகவேணும்போல. அங்கிருந்த தாதி ஒருத்தி கூறினாள். கோபாலனுக்கு தலை கிறுகிறுத்தது.

'அந்தப் பிள்ளையின்ர பெயரென்ன எண்டு தெரியுமோ' உதடுகள் உலர வார்த்தைகள் வறண்டு போய் வந்தன.

அதனிடையில் 'ஐயோ அண்ணை உன்ரை பெடியனுக்குத்தான் பெரிய காயம் அவனையெல்லோ கிளிநொச்சிக்கு கொண்டு போட்டினம்' என்று கதறிக்கொண்டு வைத்தியசாலை வராந்தாவில் ஓடி வந்தாள் தங்கம்மா. அவளும் ஸ்கந்தபுரம் வாசி அவளுக்கும் கையில் பெரிய பந்தம் போல கட்டுப்போட்டிருந்தது. மெதுவாய் இரத்தம் கசிந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

★ ★ ★

அதிகாலை வேளை ஆண்டையின் வீட்டு வாசலில் நெல் மூடைகள் குவிந்து கிடந்தன. திடுக்கிட்டெழுந்த ஆண்டை என்ன விடயம் என்று விசாரித்தார். அவரது வயலில் அறுவடை முடிந்துவிட்டதாகவும், அங்கிருந்துதான் நெல் மூடைகள் கொண்டு வந்து குவிக்கப் பட்டிருப்பதாகவும் வேலையாட்கள் சொன்னார்கள்.

அது எப்படி சாத்தியமாயிற்று? நேற்று வரையில் பச்சையாகக் கிடந்த நெற்பயிர்கள் ஓரிரவில் விளைந்தது எப்படி? அறுவடை முடிந்து. சூடடித்து நெல்மூடைகளாக்கிவிடுவதற்கிடையில் இங்கு வரை கொண்டு வந்துசேர்க்க எப்படி முடிந்தது? ஆண்டைக்கு தலை சுற்றியது. மீண்டும் மீண்டும் இந்தக் கேள்விகளே அவர் மனத்திரையில் எழும்பி அலைக்கழித்தது.


உடனே நந்தனைக் கூட்டி வா' ஆணை பிறப்பித்தார் ஆண்டை. சற்று நேரத்திற்கெல்லாம் நந்தன் ஆண்டை வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். செய்தியறிந்து வாசல்வரை வந்த ஆண்டைக்கு நந்தனின் முகத்தை ஏறெடுத்துப்பார்க்க இயலவில்லை. அவனது கண்களிலிருந்து ஒருவித அருளொளி பரவி ஆண்டையின் கண்களைக் கூசச் செய்தது.

'என்ன நந்தன் இதெல்லாம்?'

'என்ன ஆண்டே? எதனைக் கேட்கிறீர்கள்?'

நேற்று வரை பச்சையாக கிடந்தவயல் - திடீரென அறுவடையானதும் திடீரெனநெல் மூடைகளாய் வந்து குவிந்து கிடப்பதும் இதுஎன்ன செயல்? ஆண்டை கோபத்தைக்கொப்பளித்தார்.

யான் ஏதுமறியேன்? என் செயல் ஏதுமில்லை? தோளில் போட்டிருந்த துண்டும் கக்கத்திற்கு மாறிவிட நந்தன் பணிந்தான்.



ஆண்டைக்கு ஆண்டவனின் திருவிளையாடல் புரிந்தது.

'நந்தா. நீ இப்போதே சிதம்பரத்திற்குப் புறப்படு' எனப் பதிலளித்தார்.

நந்தன் பக்திப் பிரவாகத்தால் ஆனந்தக் கூத்தாடினான்.

'சிதம்பரம் செல்வேன்நான். இகமெலாம் போற்றும் சிதம்பர தரிசனம் காண்பேன் நான்' எனப்பாடினான். கும்மாளமிட்டான்.

ஆனாலும் என்ன? சிதம்பரம் வரை வந்து சேர்ந்தால் மட்டும் சிதம்பர தரிசனம் கண்டுவிட முடியுமா? நந்தன் சிதம்பர வாயிலில் நின்றான். உள்ளே போகத்தயங்கியபடி. ஒற்றைக் காலைத் தூக்கிய டும் நடராச முகூர்த்தம் கண்டு விடுவதைத் தடுக்கும் வகையில் நந்திதேவர் குந்தியிருந்தார்.

ஆண்டவன் வரம் கிடைத்தாலும் பூசாரி கிருபை கிடைக்கவில்லையே' என நந்தன் கவலைப் பட்டுக்கொண்டான்.

★ ★ ★

சாறனும், சேட்டுமாக வேர்த்து விறுவிறுக்க கோபாலன் ஆரியகுளம் சந்தியையும் கடந்து ஸ்ரான்லி றோட்டில் வேகமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

இதோ யாழ்ப்பாணம் வந்து விட்டேன். இன்னும் சிலகணப் பொழுதுகளில் என் மகனைக் காண்பேன் என்ற ஆசையினால் உந்துதல் பெற்று புது உற்சாகம் கோபாலனுக்குப் பிறந்தது எங்கை காயமோ? எப்படிப்பட்ட காயமாக இருக்குமோ? ஏதும் எலும்புகளில் முறிவு பட்டிருக்குமோ? இல்லாட்டால் கிளிநொச்சியில இருந்து அவசரமாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பினமோ? பெரிய காயம் தான் ஏற்பட்டிருக்க வேணும். பாவம் எப்படித் தாங்கிக் கொள்வானோ? அவனுக்கு இப்ப என்ன தேவைப்படும்? என்ன வாங்கிக்கொண்டுபோகலாம். எதுக்கும் முதலில அவனைப்போய்ப்பார்த்து எப்படி இருக்கிறான் என்பதைக் கண்டறிந்தபின்பு தேவையானதை வாங்கலாம்... என்று பலவாறான எண்ணங்களில் மூழ்கிப் போய் இருந்தவன் தான். போகும் பாதை சரியானதா என ஒரு கணம் சஞ்சலப்பட்டான். கட்டிடக் காடுகளாய் நிறைந்து கிடக்கும் யாழ்ப்பாண நகரத்திற்கு அவன் இப்போதுதான் முதன் முதலாக வருகின்றான் என்பதும் அவனது சஞ்சலத்திற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும் அதனால்,

'அண்ணை ஆஸ்பத்திரிக்கு "எந்தப் பக்கம்போகவேணும்? என்றான் அருகில் வந்து கொண்டிருந்த இன்னுமொருவரிடம். இவனைத் திரும்பி ஒருவிதமாய்ப் பார்த்த பார்வையில் கோபாலன் கூசிப் போனான்.

'இதாலை திரும்பிப் போங்கோ' என அவர் பதிலளிக்கவும், கோபாலன் இடப் பக்கம் சைக்கிளை வெட்டித் திருப்பினான்.

விக்டோறியா றோட் சந்திக்கு சமீபமாக வந்தபோது மீண்டும் சந்தேகம். அருகில் நின்றவரிடம் விசாரித்தான். 'ஆஸ்பத்திரிக்கு எந்தப்பக்கம் போகவேணும்? 'இது தான் ஆஸ்பத்திரி' உயர மதில்கட்டி உள்ளே நிற்கும் கட்டடங்களைச் சுட்டிக் காட்டினார் அவர்.

'உள்ளே போகும் வாசல் எங்கே?' அவன் அடுத்த கேள்விக்குத் தாவினான்

அதோ என்று கையை நீட்டிக்காட்டி விட்டு அவர் அப்பால் நகர்ந்து விட்டார்

கோபாலன் சைக்கிளை மடக்கித்திருப்பி விக்டோறியா வீதியின் பக்கமிருக்கும் ஆஸ்பத்திரிவாசலைஅண்மித்தான்.

சைக்கிளை உள்ளேவிட எத்தனித்தபோதுதான் 'எங்கோ இருந்து தேவதூதர்கள் போல வெள்ளாடை உடுத்த இருவர் ஓடி வந்து "அண்ணை.. அண்ணை எங்கை போறியள்?'

'தம்பி என்ர பிள்ளை. ஹெலி சூட்டுக்கை வெடிபட்டு இங்க கொண்டு வந்தவை... பார்க்க' இழைப்பு மேலிட வார்த்தைகள் துண்டு துண்டாய் வெளிப்பட்டன அவனிடமிருந்து.

'இதால போகேலாது அப்படியே போய் முன்பக்கத்தில ஓ.பி.டி வாசலால் வாருங்கோ'

கிட்டத்தட்ட அழுகையே வந்துவிடும் நிலையில்.. 'அது எங்கைதம்பி இருக்கு' கோபாலன் விம்மலுக்கிடையே கேட்டான்.

இப்பிடியே போய் சுற்றிக் கொண்டு வந்தால் முன்பக்கத்தால வரலாம். போங்கோ இதனிடையில் ஒரு வேட்டிக்காரர் கோபாலனை விலத்திக் கொண்டு உள்ளே போனார்.

'தம்பி அவர் போறார் தானே... நானும்...' மெல்ல இழுத்தான்.

'அவர் இங்க வேலை செய்யிறவர். நீரும் அப்படியே.. உங்களோடை நிண்டு கதைக்க நேரமில்ல வெளியிலபோம்.'

'தம்பி நான் கிளிநொச்சியில இருந்து வாறன்..விளப்பம் தெரியேல்ல கோபிக்காதேயும்'

'அதெல்லாத்தையும் முன்னுக்குப் போய் கேளும்' என உரத்துச் சத்தமிட்ட வெள்ளைக் கால்சட்டைக்கு துணையாக இன்னுமொரு காக்கிக் கால்சட்டையும் சேர்ந்து கொள்ள கோபாலன் கதவுக்கு வெளியே தள்ளப்பட்டான். இரும்புக் கதவு இழுத்துச்சாத்தப்பட்டது.

செய்வதறியாமல் திகைத்து வெளியே நின்ற கோபாலன் ஏதோ ஒருவழியில்ஓ.பி.டிவாச

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீழ்க இன்றேல் எழுக!

விழுந்து படுத்திடுக
விடியலை விரும்பாதார்-
இழுத்து மூடி
இறுக்கிக் கொள்க கண்களை!

வளைந்து நின்றிடுக
விடுதலை கருத தார்-
அந்நியன் சவாரிக்கு
வசதியாய்த் தருக முதுகினை!

துணிகளைக் களைந்தெறிக
தன்மானம் வேண்டாதார்-
தெருவில் இறங்கி
நாணமற்று அலைக நிர்வாணமாய்!

சூரியனைத் தேடுவோர் யாருளர்?
விலங்கினை நொருக்கிடத் துடித்திடுவோர்
இடைத்துணியை நழுவவிடா உறுதியுள்ளோர்...
யாருளர்?
அனைவரும் வருக!
இறுகப் பிணைத்திடுக கரங்களை!
ஆளுக்கொரு கருவியாய் ஏந்திடுக!
களம் நோக்கி விரைந்திடுக!

செ. பொ. சிவனேஷ்

# யாராலும் புரிந்து கொள்ளப்படாத மக்களின் கதை

## இலங்கை இனப்பிரச்சினை அடிப்படைகள்

ம. யது

இந்து மகா சமுத்திரத்தில் இந்தியப் பேரரசின் கீழ் இருப்பதான அமைவிடம் காரணமாகவே இலங்கைத்தமிழர்களை எல்லோரும் சந்தேகித்தார்கள். தமிழர்களை இந்தியப்பேரரசின் பின்னணியில் வைத்தே அதாவது இந்தியப் பேரரசின் நீட்சியாகவே எல்லோரும் புரிந்து கொண்டார்கள். யாருமே தமிழர்களைத் தமிழர்களாகப்புரிந்துகொள்ளவில்லை என்பதிலிருந்துதான் தமிழர்கள் படுகின்ற சகல துயரங்களும் ஆரம்பமாயின.

இந்தியாவில் உண்டாகக் கூடிய எந்த ஒரு மாற்றத்தையும் உடனடியாக உள்வாங்கக் கூடிய மக்களாக, இலங்கைத் தமிழர்களை பிரித்தானியா நோக்கியது. சிங்களவர்கள் இந்தியப்பேரரசின் படையெடுப்பு வாசலாகத் தமிழ்நிலத்தை நோக்கினார்கள். இந்தியாவோ, தமிழீழ உருவாக்கம் தன்னிடமுள்ள ஐந்து கோடித் தமிழர்களையும் ஏற்கனவே 'திராவிடநாடு' கேட்டவர்கள் தன்னிடமிருந்து கழற்றி எடுத்து அகன்ற தமிழ்த்தேசியம் ஒன்றை உருவாக்கி விடுமோ என்று அஞ்சியது; அஞ்சுகிறது.

இதனாலே தமிழர்களைப் பிரித்தானியர் நசுக்கினர். சிங்களவர் நசுக்கினர். இந்தியர்களும் நசுக்கினர். இவ்வாறு தமிழர்கள் நசுக்கப்பட்டு வரும் கதையை அதன் வரலாற்றுப் பின்னணியில் வைத்து விவரிக்கின்றது மு. திருநாவுக்கரசுவின் "இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்" என்ற நூல்.

கடந்த ஆண்டில் (1991) மு. திருநாவுக்கரசு எழுதிய இரண்டாவது நூல் இது. தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் துரிதமடைந்த 80களின் முற்கூறிலிருந்து இனப்பிரச்சினையை அதன் சர்வதேசப்பரிமாணங்களில் விளக்க எடுக்கப்பட்ட முயற்சிகளில் மு.தி யின் வெளியீடுகள் மிக முக்கியமானவை. முன்னோடியானவை. தீர்க்கதரிசனத்துடன் கூடிய முடிவுகளைக்கூறும் துணிச்சலுடையவர் மு.தி. 80களின் முற்கூறிலேயே அன்றைக்கிருந்த அரசியல் நிலையரங்களைக்கவனத்திற்கொண்டு மு.தி எச்சரித்தார். "இந்தியா தமிழர் விடுதலைப் போராட்டத்தை சுவீகரிக்கும் ஆபத்துஉண்டு" என்று இவ்வாறேகடந்த ஆண்டு வெளியிட்ட தனது "புதியசர்வதேச அரசியல் ஒழுங்கு" என்ற நூலிலும் கெடுபிடிப்போர் விலகிய உலகில் மேற்குலகிற்கு இருந்த சிவப்பு ஆபத்து (Red danger) நீங்கிவிட்டது. இனி மேற்குலகு இஸ்லாமியருக்கு எதிரான (Islamic danger) இஸ்லாமிய ஆபத்து குறித்தும், ஜப்பானியர் சீனர் (மங்கோலியர்) களுக்கு எதிரான மஞ்சள் ஆபத்து (Yellow danger) குறித்தும் அணிதிரளப் போகிறது என்று கூறியிருந்தார். அண்மையில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க செனட்டர் பிரஸ்லர் இஸ்லாமிய ஆபத்துக்குறித்து பகிரங்கமாக எச்சரித்தார். இது மு. தி யின் கூற்றை மெய்ப்பிப்பதாக அமைகிறது.

மு.தி யின் ஒன்றரை வருடகால உழைப்பின் கனிதான் 'இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' என்ற நூலாகும்.

இலங்கை இனப்பிரச்சினை அநேகமாகப் பிழையாகவே புரிந்து கொள்ளப்பட்ட ஒரு பிரச்சினைதான். தமிழர்களை அநேகமாக யாருமே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை எனலாம். யாராலும் புரிந்துகொள்ளப்படாத மக்கள் கூட்டம் என்பதினாலேயே தமிழர்கள் தனித்து விடப்பட்டார்கள். தமிழர்களின் பேரால் செய்யப்பட்ட எல்லா உடன்படிக்கைகளும் முறிக்கப்பட்டன. ஏனெனில் மறைந்த ராஜீவ்காந்தி கூறியதுபோல இலங்கைத் தமிழர்களை யாராலும் திருப்திப்படுத்த முடியாது என்பதனால் அல்ல மாறாக, தமிழர்களைச் சரியாகப்புரிந்து கொள்ளாமற் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் என்பதனாலேயே, அவை முறிந்து போயின.

தமிழர்களை யார்தான் சரியாகப்புரிந்து கொண்டார்கள்? சிங்கள அறிஞர்களோ அல்லது பத்திரிகைக்காரர்களோ அநேகமாக இனவாதத்தால் குருடாக்கப்பட்டவர்கள்தான். சிறு குழுவினரைத் தவிர, பெரும்பாலான சிங்கள அறிஞர்களும் பத்திரிகைக்காரரும் தமிழர்களை தவறாகப்புரிந்துகொண்டார்கள் அல்லது புரிந்து கொள்ள விரும்பவில்லை எனலாம். இந்தியா தனது நலன்களினூடாகவே தமிழர்களை நோக்குகிறது. தமிழர்களின் சுதந்திரத்தை தனது பாதுகாப்பைவிட மேலானதாக இந்தியா கருதவில்லை. சிறுகுழுவினர் தவிர, பெரும்பாலான இந்திய அறிஞர்களும் ராஜதந்திரிகளும், பத்திரிகைக்காரர்களும் இலங்கைத்தமிழர்களைச் சரியாகப்புரிந்து கொள்ளத்தவறியவர்களே. இவ்வாறு சிங்களவரும், இந்தியரும் புரிந்து கொள்ளத்தவறிய தமிழர்களை அவர்களின் சொந்த புத்திஜீவிகள்- தமிழ் அறிஞர்களே சரியாகப்புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் மிகுந்த துயரமானது.

சுதந்திரப்போராட்டம் ஆரம்பமான காலமிருந்தே தமிழ் அறிஞர்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் விழுந்த இடைவெளியானது கொடூரமாகிக்கொண்டு வந்து அதிகரித்ததே தவிர குறையவில்லை. "புத்திஜீவி" என்ற வார்த்தை இங்கு மிகவும் இழிவான அர்த்தத்திலேயே பிரயோகம் பெற்றுள்ளது ஏன் இப்படி? தமிழர்களைத் தமிழ் அறிஞர்களே சரியாகப் புரிந்துகொள்ளத்தவறியது ஏன்?

பிரச்சினை இதுதான். தமிழர்களிடம் அறிவிபலை ஒரு துறையாகப் பார்க்கும் மரபு அதிகமாக இல்லை. என்பதுதான். அறிவிபலை ஒரு தொழிலாகமேற்கொள்ளும் தொழில்முறைப்புத்திஜீவிகளே தமிழரிடம் அதிகம். இந்தத் தொழில்முறைப் புத்திஜீவிகள் ஆரம்பமிருந்தே போராட்டத்தின் எதிரிகள்தான். ஏனெனில் போராட்டம் இவர்கள் தொழில்ரீதியாய் அனுபவித்து வந்த வசதிகள், சலுகைகள், கௌரவங்களை நிராகரித்து விட்டது என்பதுதான் முக்கிய காரணம்.

உள்ளூர் புத்திஜீவிகளைவிட தமிழர்களின் சுதந்திரப்போராட்டத்தைக் குறித்து சர்வதேச அளவில் அறிவியல்மட்டத்தில் சாதிக்கப்பட்டவை என்று எடுத்துக்கொண்டால் அங்கேயும் தமிழர்களைச் சரியாகப் புரிந்துகொண்ட அறிஞர்களின் படைப்புக்கள் மிகக்குறைவே. தமிழர்களைத் தமிழர்களாகப் பார்க்கத்தவறிய உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் அநேகம்பேர் ஒன்றில் புத்திஜீவி மனோநிலையிலிருந்து பிரச்சினையை அணுகினார்கள் அல்லது குறிப்பிட்ட சில சம்பவங்களில் இனப்பிரச்சினையின் அடிப்படைகளைத் தேடினார்கள். அல்லது ஏதாவது ஒரு கோட்பாட்டினூடாகத் தமிழர்களைப் பார்த்தார்கள்.

ஆனால் மு. தி. தமிழர்களைத்தமிழர்களின் துன்பங்களினூடாகப் புரிந்து கொள்ள முயல்கின்றார். இனப்பிரச்சினையின் வித்துக்களை மிக ஆதியான காலமிருந்தே (மகாவம்சகாலம்) தெளிவாக இனங்காண்கிறார். அதே சமயம் தேசியவாதம், தேசிய இனம் சுயநிர்ணயம் போன்ற நவீன கருத்துருவங்களினூடாகவும் தனது முடிவுகளை நிறுவக் கூடியவராக உள்ளார். அவர் சொல்கிறார்: தேசிய இனப் பிரச்சினை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைதான். தேசிய இனப்பிரச்சினை அடிப்படையில் வர்க்கப் பிரச்சினை அல்ல. ஆனால் வர்க்கப் பிரச்சினை தேசிய இனப்பிரச்சினை மீது சில வேளைகளில் தாக்கத்தைஏற்படுத்தக் கூடும். அதேபோல தேசிய இனப்பிரச்சினையும்வர்க்கப்பிரச்சினைமீது தாக்கத்தைஏற்படுத்தக்கூடும்.

தனது நூலை மு. தி. யாழ் பல்கலைக்கழக நூலகத்திற்குச் சமர்ப்பித்துள்ளார். நூலகம் எனப்படுவது அசைவற்ற கட்டடத்தொகுதி அல்ல. பரீட்சைக் காலங்களில் மட்டும் தேடிப்போகும் அமைதியான வாசிப்பிடமும் அல்ல. அது உயிருள்ளது. வாசிக்கப்படுவதனாலேயே உயிர் கொள்வது. எனவே வாசிக்கப்படுவதற்காகவே எப்பொழுதும் காத்திருப்பது. இவ்வாறான ஒரு நூலகம் மு. தி யின் நேசிப்பைப் பெற்றுள்ளது.

"சிங்கள பௌத்தரின் தமிழின எதிர்ப்பின் ஊற்று இந்திய எதிர்ப்பாகும். ஆனால் அதற்குப் பலியாவதோ ஈழத்தமிழர்களாகும்..."

இலங்கையில் இந்திய ஆதிக்கத்திற்குத் தமிழர் வழிவகுத்துவிடுவர் எனக் கூறித்தான் சிங்கள அரசு தமிழரை ஒடுக்கியது. ஆனால் ஈழத்தமிழர் இந்தியாவின் ஐக்கியத்திற்குப் பாதகமாய் அமைந்து விடுவர் என எண்ணிய இந்திய அரசு தமிழகத்தின் தனிநாட்டுப்போராட்டம் எழாது தடுக்க வேண்டும் என்பதற்காக ஈழத்தமிழரை மிக மோசமாக ஒடுக்கியது...

இந்தியாவின் பெயரால் காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்த தமிழரை இந்திய அரசும் ஒடுக்கிய இந்தச் சோகத்தை, இந்த வரலாற்று இருதலை நிலையை எப்படிவர்ணிப்பது? இவ்வாறு எழுதும் மு. தி. நூலை நகர்த்தி செல்லும் விதம் ஏதோ ஒரு கதையை வாசிப்பதான உணர்வையேஏற்படுத்துகிறது. மெய்யாகவே அங்கு ஒரு கதைதான் சொல்லப்படுகிறது. அது யாராலும் புரிந்து கொள்ளப்படாத மக்களின் கதை.

# நெஞ்சு பொறுக்குதில்லையே....

## இன்றைய நிகழ்வு குறித்து உயர் கல்வி நிறுவன மாணவி ஒருவரின் ஆதங்கம்.

கார்க் கொட்டிகை (Car Shed) ஒன்றினுள் ஏழுபேர் கொண்ட அந்தக் குடும்பம் 'குடித்தனம்' செய்கிறது. சமையலறை, படுக்கையறை. இன்னும் எல்லாமே அந்தச் சிறிய தகரக் கொட்டகைதான்.

மாலை 4-00 மணிக்கு மேலாகிறது.

காலையில் புறப்பட்டுப் போன தந்தை எப்போது வந்து சேருவார் எனத் தந்தையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தபடியே குழந்தைகள். அவர்களா எதிர்பார்த்தார்கள்? இல்லை.... அந்தப் பிஞ்சுகளின் வயிறுகளே எதிர்பார்த்தன. அந்த வீட்டில் அன்று முழுவதும் எல்லோருமே ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட - ஒரு கோப்பை தேநீர் மட்டும் குடித்துவிட்டு மாலைப்பொழுதுக்கு - தந்தையின் வரவுக்கு- ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

பிள்ளைகளின் அம்மாவுக்கும் பசிதான். ஆனால் பசியையும் மீறித் தனது கணவனைப் பற்றிய கவலை அவளுக்கு. குடும்பத்தின் வயிற்றைக் கழுவுவதற்காகத் தொய்வு நோயின் தொல்லைகளுடன் அவன் காலையில் புறப்பட்டுப் போயிருக்கிறான். அவனுக்குக் கையில் ஏதாவது கிடைத்தால் தான் அன்று அடுப்பில் உலை ஏறும்.

அன்று மட்டுமல்ல. கடந்த மூன்று மாதங்களாகவே இது தான் அந்தக் குடும்பத்தின் கதை.

அதற்கு முன்?

அந்தக் குடும்பம் புங்குடுதீவில் வசித்து வந்தது. சொந்தமாகக் கடை ஒன்று வைத்து வியாபாரம் நடத்திய தில், சேமிப்பு என்று இல்லாத போதும் குடும்பம் பட்டினியின்றி வாழ்ந்து வந்தது. புங்குடுதீவுக்கு சிறிலங்கா இராணுவம் வந்ததும் இவர்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். யாரோ ஒரு புண்ணியவான் தனது வீட்டிலுள்ள கார்க்கொட்டகையை இவர்களுக்கு மனமுவந்து அளித்ததில் 'வீடு' என்று சொல்லிக் கொள்ள ஒருஇடம் கிடைத்தது. ஆனால் உழைப்பு? கூலி வேலை செய்தாவது குடும்பத்தைக் காக்க வீட்டுத் தலைவன் துணிந்தான். அவனுக்குக்கடுமையான 'தொய்வு' நோய். அதிலும் இப்போ பனி மிகவும் உக்கிரம். கேட்க வேண்டுமா?

அதோ.. அவனே வருகிறான். இருமியபடியே நடக்கவே சிரமப்பட்டபடி வருகிறான். மனைவி ஓடிப்போய் அவன் கையிலிருந்த பையை வாங்குகிறாள்.

'இண்டைக்கு அறுபது ரூபா தானப்பா கிடைச்சுது..' சொல்லியபடியே களைப்பினால் ஒரு ஓரமாய்ச்சாய்ந்து படுக்கிறான்.

இன்றைய விலைவாசியில் ஒரு அறுபது ரூபாய் ஏழு ஜீவன்களுடைய அரை வயிற்றையாவது நிரப்பப் போதுமானதா?

இப்படி ஒரு குடும்பமா, இரண்டு குடும்பமா, எத்தனை குடும்பங்கள் இன்று அல்லல் படுகின்றன? கடற்றொழில் செய்தவர்கள், விவசாயம் செய்தவர்கள் இன்னும் இன்னும்... எத்தனை பேர் தொழில் செய்ய முடியாமல், வாழ வகை தெரியாமல் துன்பத்தில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்...

இது - எமது மண்ணின் இன்றைய அவலங்களில் ஒன்று.

★ ★ ★ ★ ★

இரவு 3-00 மணி இருக்கும்.

பின்னிரவு வேளைகளில் அயர்ந்த நித்திரை வரும் என்பார்கள். பனியும் வேறு இப்போ மிக மிக அதிகமாகவே வீசுகிறது. தடித்த போர்வையால் மூடிக்கொண்டு படுத்தால் நித்திரைக்கும் கேட்க வேண்டுமா?

மக்கள் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில்.

அவன் மட்டும் உறங்கவில்லை. கொட்டு கொட்டென்று விழித்தபடியே...

மிஞ்சி மிஞ்சிப் போனால் அவனுக்குப் பதினைந்து வயசுக்கு மேல் இருக்காது இந்த 3-00 மணி இரவில் - பனிக்குளிரில் - அவனுக்கு மட்டும் தூக்கம் ஏன் வரவில்லை?

ஓகோ... புரிகிறது.

எதிரியின் வரவைக் கண்காணித்தபடி தனது காவலரண் கடமையிலீடுபட்டிருக்கிறான் அவன். அவன் ஒரு போராளி..

அவன் மட்டும்தானா? ஆயிரக் கணக்கில் அவன்போன்ற வீரர்கள் ஆங்காங்கே அந்த வேளையில் விழித்தபடியே..

குளிரில் அவன் உடல் இலேசாய் நடுங்குகிறது.

போர்வைக்குள் முடங்கிக்கொண்டு அம்மாவுக்கு அருகில் படுத்து வெது வெதுப்பாய் உறங்கிய நாட்களை அவன்

- அஜந்தி -

(6ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு எல்லைக் கிராமங்களை பாதுகாப்பதில் துணைப்படை



மணலாறு மாவட்ட
விசேட தளபதி
அன்பு

இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையிலுள்ளது மணலாறு எல்லைக்கிராமங்கள். இம் மக்களின் நிலையும் அதுதான். ஆனால் இழப்புக்களை நிரந்தரமாக்க அவர்கள் தயாராக இல்லை. தாம் இழந்த மண்ணை, இழந்த பொருள்களை மீட்க வேண்டும் என்பதே அவர்களின் கொள்கை இது இன்று அவர்களிடம் காணப்படும் உறுதி.

எண்பதுகளின் ஆரம்பத்தில் பயிற்சியின்றி ஆயுதமேந்தி வீரத்துடன் செயல்பட்ட மக்கள்.

தொன்னூறின் ஆரம்பத்தில் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து தேவை கருதி பயிற்சி பெற தயாரானார்கள். இவர்களின் அவசியத்தின் தேவையின் அடிப்படையில் வேட்டைத் துப்பாக்கிகளுடன் பயிற்சி பெற விடுதலைப் புலிகள் ஊன்று கோலாய் இருந்தவர்.

பயிற்சியின் ஆரம்பத்தில் மணலாறு மக்களின் மனஉறுதி பரீட்சிக்கப்பட்டது. வேட்டைத் துப்பாக்கிகளோடுகளம் புகுந்தனர்.

1991வைகாசித் திங்களோடு இவர்கள் பயிற்சிமுடிந்து ஓராண்டு நிறைவானது. 1992 இல் இவர்களின் பயிற்சி இரண்டாவது ஆண்டை நோக்கி நகர்கின்றது இந்த இரு ஆண்டில் இவர்கள் பலபடிப்பினைகளை பெற்றுள்ளார்கள். ஆயுதங்களைப்பயன்படுத்துவதில்' படிப்படியான வளர்ச்சியையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தேவை அவசியம்கருதிவேட்டைத் துப்பாக்கியோடு களம் புகுந்தவர்கள் துணைப்படை யென பெயர் தாங்கினர். இந்த நிலையில் எல்லைக் கிராமமக்கள் அனைவரும் படையிலே இணையத் தொடங்கினர். வயதுபேதமின்றி எழுபதுவயது நிரம்பிய வயோதிபர்களும்துப் பாக்கி தாங்கி நிற்கின்றனர்.

இருவருட காலத்தில் இவர்கள் விடுதலைப் புலிகளோடு இணைந்தும், தனித்தும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 19-11-1990 இல் துணைப் படையினர் தாமாகவே திட்டமிட்டு, மணலாற்றின் எல்லைக் கிராமமாகிய சூரியனாறு என்னுமிடத்தில் சிங்கள ஊர்காவற்படையினர் மீது தாக்குதலை நடத்தினர். நவீன ஆயுதம்தரித்த இந்தச்சிங்கள ஊர் காவல்படையினரிடம் இருந்து நவீன ஆயுதங்கள் சிலவற்றையும் இந்தத் தாக்குதலில் இருந்து பெற்றுக்கொண்டனர்.

இந்தத் தாக்குதலே தமிழீழ வரலாற்றில் துணைப்படையினரின் முதலாவது நடவடிக்கையாகும்.

இதுவரை காலமும் வேட்டைத்துப்பாக்கிகளுடன் தாக்குதல் நடத்தியவர்கள் பயிற்சியைப் பெற்றவர்கள் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நவீன ஆயுதங்களுடன் எதிரியை தாக்க வேண்டும் எனும் வேண்டுகோளை முன்வைத்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பயிற்சி ஆரம்பமானது இப்பயிற்சி இந்த வருடம் 1992 ஆம் ஆண்டு தைத்திங்கள் 18 ஆம் நாள் நிறைவு கண்டது.

இவர்களின் பயிற்சியை முடித்து வைத்து உரையாற்றிய விசேட தளபதி திரு. அன்பு தனது உரையில் "நீங்கள் குடும்பத்தவர்கள். குடும்பத்தில் இருந்து உங்களைப் பிரிக்க மாட்டேன். ஆனால் சமூகத்தையும், விடுதலையையும் பாதிக்கும்குற்றச் செயல்களை அனுமதிக்க முடியாது சந்தேகங்களையும் பிரச்சினைகளையும் பொறுப்பாளரை அணுகி தீர்க்க வேண்டும். மக்களுக்கு நம்பிக்கையாக நடக்க வேண்டும். மக்களோடு மக்களாக நீங்கள் இருப்பதால் சில அடிப்படைப் பிரச்சினைகளை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்" எனக் கூறினார்.

துணைப்படையினருக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்கிய துணைப்படைப் பொறுப்பாளர் கடாபி அவர்களுக்கு அன்பு பாராட்டுதல்களையும் வழங்கினார்.



விசேட தளபதி அன்பு துணைப் படை அணிவகுப்பை ஏற்கிறார்.

---

## நெஞ்சு.....

மனம்-அவனையறியாமலேயே நினைத்துப் பார்க்கிறது

ஒரு கணம் தான். ஒரே ஒரு கணம் தான்... மறுகணம் அவனது கைகள் துப்பாக்கியை மேலும் இறுகப்பற்றுகின்றன.

அங்கே அவனது வீட்டில் அவனுடைய அம்மா அந்த நேரம் நித்திரை கலைந்தவளாய்த் தனது போராளி மகனுடைய நினைவுகளில மூழ்கிய படியே படுத்திருக்கிறாள்.

'குளிரெண்டால் என்னோடை வந்து ஒண்டிக் கொள்ளுற என்ரை பிள்ளை இப்ப அங்கை என்ன செய்வானோ? ம்... என்ரை பிள்ளையை மட்டும் நான் நினைக்கிறன். எத்தினை பிள்ளையள் எங்கடை நாட்டைப் பாதுகாக்க இண்டைக்கு எத்தினை விதமான கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கிறதுகள்... இந்தப் பிள்ளையள் படுகிற கஷ்டங்களுக்கெல்லாம் கெதியிலை ஒரு நல்ல முடிவு கிடைச்சிடவே. ஊம்... ஆண்டவனே.!

இப்படி எங்கள் மண்ணில் இன்று எத்தனை அம்மாக்களும பிள்ளைகளும் பிரிந்து வாழ்கிறார்கள்?

இது தவிர்க்க முடியாத ஒன்று

காலம் இந்த மக்களுக்கு இட்ட கட்டளை.

★ ★ ★

"அம்மா— இண்டைக்கு எப்பிடியும் முந்நூறு ரூபா எனக்கு நீங்கள் தந்தேயாக வேணும்... இண்டைக்குத்தான் கடைசி வாற சனிக்கிழமை 'வெல்கம் பாட்டி' (*Welcome Party*)."

மகன் தாயிடம் கண்டிப் பரிஞ்ச் சொல்லுகிறான்.

'அதுக்கு ஏனடி முந்நூறு ரூபாய்? இப்ப நான் எங்கை போறது?'

'எங்கை போவியோ... எனக்குக் காசு வேணும்...' மகன் பிடிவாதமாய் நிற்கிறான்.

மண்ணெண்ணை, சவுக்காரம் எல்லாம் மலிஞ்சிருக்கு... நாளைக்கே விலைஏறிவிடும்.. கடைசி ஒரு ரெண்டு லீற்றர் எண்ணையும் நாலுசவுக்காரம் தன்னும் வாங்கி வைப்பமெண்டு நினைச்சால் அதுக்கே காசில்லை... கடன் வாங்கவும் மனமில்லை இப்ப உனக்காகக் கடன் பட வேண்டியிருக்கு...'

அடுத்த வீட்டில் கடனாய் முந்நூறு ரூபா வாங்கி மகனிடம் கொடுக்கிறாள் அம்மா.

'சனங்கள் படுகிற பாட்டுக் குள்ளை உங்களுக்கு இதெல்லாம் தேவையே பிள்ளை...? உன்ரை வகுப்பிலை ஒவ்வொருத்தரும் முந்நூறு ரூபாய் குடுத்தால் ஒரு லட்சத்துக்கு மேலை சேருமே.. உங்கடை வெல்கம் பாட்டியைச் சிம்பிளாய் வைச்சுப் போட்டுச் சேர்த்த மிச்சக் காசை ஒரு அகதிமுகாமுக்குக்குடுத்தீங்கள் என்டால் அது உண்மையிலை பிரயோசனமாயிருக்கும்.. எத்தினை சனம், குஞ்சுகள் குழந்தையள் கூட - ஒரு நேரச் சாப்பாடே இல்லாமல் பட்டினி கிடக்குது

'தனியொருவனுக்குணவில்லையெனில் இந்த சகத்தினை அழித்திடுவோம்' எண்டு பாடத்திலை படிப்பியள்.. மேடையிலும் முழங்குவியள். அதிலை ஒண்டும் குறைச்சலில்லை'

அம்மாவின் நியாயங்கள் மகனுக்கும் விளங்காமல் இல்லை.

விளங்கி என்ன செய்ய முடியும்?

இது உயர் கல்வி ஸ்தாபனத்தில் இன்றைய நிர்ப்பந்தம்.

★ ★ ★

'வெல்கம் பாட்டி'கோலாகலமாய் நடக்கிறது

மாணவ, மாணவியர் மிகவும் உற்சாகமாய்க் காணப்படுகின்றனர்.

கலை நிகழ்ச்சிகள் ஒருமாணவன் சில புரட்சிப் பாடல்களைப்பாடுகிறான். ('புரட்சி'யையும் நாங்கள் மறக்கவில்லை என்பதைத் தெரிவிக்கவோ?)

மதிய உணவு. எல்லோருக்கும் உணவுப் பொட்டலங்கள்.

சாப்பிட்டு முடிக்காமல் அரை குறையாய் வீசி எறியப்பட்ட பொட்டலங்களே அதிகம்!

மாணவர்களின் 'ஆட்டம்' துவங்குகிறது.

'ட்ரம்' தாளமிசைக்க - 'நிலை' மறந்துஆடுகிறார்கள்.

வீட்டின் நிலைமறந்து. நாட்டின் நிலை மறந்து இந்த மக்களின் நிலை மறந்து, தங்களுடைய 'நிலை' மறந்து ஆடுகிறார்கள்.

ஆடிக்கொண்டேயிருக்கிறார்கள்...

★ ★ ★

எதிரி. எங்களை அழிப்பதற்கான முஸ்தீபுகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறான்.

எந்த நேரத்திலும் அவனது 'அழிப்பு' நடவடிக்கை ஆரம்பமகாலாம். 'பிரச்சினைவரப் போகிறது' என்ற பயத்துடனும், 'வந்தால் என்ன செய்யப் போகிறோம்' என்ற ஏக்கத்துடனும், 'பயங்கரம்' ஒன்றை எதிர்பார்த்தபடி மக்கள் ஒவ்வொருநாளையும் பீதியுடன் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குழந்தையின் பட்டினி எங்கள் இதயத்தை உலுக்கவில்லையா..?

நாங்கள் உறங்கும் போது தாங்கள் விழித்திருந்து எம்மைப் பாதுகாப்பவர்களின் மனநிலையைஎண்ணிப்பார்க்க ஏன் எம்மால் முடியவில்லை?

இந்த மண்ணில் அவலங்கள், எங்கள் ஒவ்வொருவரினதும் அவலம் தான் எனக் கொள்ள ஏன் எம்மில் சிலரால் மட்டும் முடியவில்லை?

இன்றைய சூழ்நிலையில் நாங்கள் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயல்பட வேண்டாமா?

★

---

## விசித்திர புதை பொருள்

அண்மையில் கடலுக்கடியில் கண்ணாடி இளையோடு அமைந்த குடுவையொன்றை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு எடுத்தனர். ஆனால் அதனைதிறந்துபார்ப்பதற்கு விஞ்ஞானிகள் தயங்குகின்றனர்.

அந்தக் குடுவையின் மேல் உலகில்ல மிகவும் பழைய மொழியான சுமேரிய எழுத்துக்களினால் ஒரு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் 'மிகவும்பழைமையான டீஜீன் என்னும் அசுத்த ஆவி அந்தக் குடுவைக்குள் இருப்பதாகவும் அதனைத்திறக்க வேண்டாம்'' எனவும் எழுதப்பட்டிருக்கிறது.

நவீன ஊடுருவும் (Scanning) கருவிகள் மூலம் பரிசோதித்த போது குடுவையின் அடியில் ஒருமிகவும் சிறியபெண் உருவம் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஏறத்தாழ 5000 வருடங்களுக்கு முன்னர் அரேபியக் கடலுக்கு அருகாமையில்ஒருதீவில் கிரேக்கக் கப்பலொன்று விபத்துக்கு உள்ளாகியது. அந்த இடத்திலேயே இது கண்டு பிடிக்கப்பட்டது.

குடுவை பெரியபாறையுடன் சேர்த்து நங்கூரச்சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தது. இந்தக் குடுவ்வையைத் திறப்பதா? அல்லது அப்படியேவைத்திருப்பதா? என்பதில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

---

## சற்றே தள்ளியிரும்

லைக் கண்டுபிடித்து முன்பக்கத்திற்கு வந்து சேருமட்டும் பொழுது காத்துநிற்கவில்லை மெல்ல இருள்படரத் தொடங்கிவிட்ட வேளையில் இப்ப நேரம் போட்டுது.. இனி நாளைக் காலையில்தான் உள்ளுக்கை விடுவினம்' என்பதே கோபாலனுக்குப் பதிலாகக் கிடைத்தது.

★ ★ ★

நந்தனின் குமுறல் அதிகமாகியது. ஆண்டையிடம் அனுமதி பெற்றது முதல் சிதம்பரம் வந்து சேர்ந்தது வரை பட்ட கஷ்டங்கள் ஒவ்வொன்றும் நினைவுக்கு வர, தில்லை நடராசனின் ஆனந்த தாண்டவத்தை முழுமையாகத் தரிசிக்க முடியாமல்'சீ... இந்த நந்தி ஏன் குறுக்கே நிற்கிறது?'

'இந்த நந்தி மட்டும் இல்லாதிருந்தால்ஒற்றைக் காலை தூக்கியாடும் தில்லை நடராசனை இரு கண்களாலும் ஆரத் தழுவலாமே?' மனத்திரையில் எண்ணங்கள் மேலோங்கியது எங்கிருந்தோ ஒரு குரல் 'சற்றே தள்ளியிரும் பிள்ளாய்' என ஒலித்தது. அக்குரலின் சப்தம் அந்த மண்டபம் முழுதும் எதிரொலித்தது. நந்தி தேவர் விலகிக் கொள்ள நந்தனின் கண்கள் ஆனந்த தாண்டவத்தில் ஒன்றிப்போயிருந்தது. மெய்மறந்த நிலையில் நந்தன் நின்றுகொண்டிருந்தான்.

கோபாலனும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான். ஆனால் 'சற்றேதள்ளியிரும் பிள்ளாய்' என்ற குரல் மட்டும் எங்கிருந்தும் கேட்கவில்லை.

---

## எதிர்கால.....

இதனால் கப்பலின் ஒரு முனை நீரில் மூழ்கும். இதன் மறுமுனை செங்குத்தாக வரும் வரை இந்த தொட்டிகள் நிரப்பப்படும். ஏறத்தாழ 300 அடி நீளமான கப்பலின் ஒரு முனை நீரில் மூழ்கிவிட மறுமுனை மிதக்கும் மேடையாகிவிடும். இதில் இருந்து கொண்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மைக் காலத்தில்செய்மதிகள் மூலம் பல தகவல்கள் பெறப்பட்டு வருகின்றன. கடலின் பல்வேறு இடங்களிலும் காணப்படும் மூலப்பொருள்கள், சக்தி வளங்கள் என்பன தேடிக் கண்டு பிடிக்கப் பட்டு அவை பயன் படுத்தப் படும் அளவு வெகு விரைவாக அதிகரித்துக் கொண்டு வருகிறது.

தொடர்ந்தும் அது இருண்ட பகுதியாக இருக்கமாட்டாது. பெரிய மீன் பண்ணைகள், குடியிருப்புகள், விவசாயப்பண்ணைகள் என்பன கடலின் அடியில் அமைக்கப்படும் செய்திகள் விரைவில் வரும் என எதிர்பார்க்கலாம்.

# 'லொக்கர்பீக்' விமானக் குண்டு வெடிப்பு; லிபியர்களை ஒப்படைக்க ஐ. நா. தீர்மானம்

1988ஆம் ஆண்டு ஸ்கொட்லாண்ட்டில் உள்ள லொக்கர் பீக் கிராமத்திற்கு மேல்நிகழ்ந்த பான் அமெரிக்க ஜெட் விமானத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்குச் சூத்திரதாரிகள் எனக் கருதப்படும், லிபியாவின் உளவுப் படையைச் சேர்ந்த இருவரை விசாரணைக்கென ஐ.நாவிடம் ஒப்படைக்கும்படி ஐ. நா பாதுகாப்புச்சபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தில் மேலும் 1989ஆம் ஆண்டு ஆபிரிக்காவிற்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரெஞ்சு விமானத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணையில் லிபியா ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு லொக்கர் பீக்குக்கு மேலாக நடந்த விமானக் குண்டு வெடிப்பால் 270 பேர் கொல்லப்பட்டனர். இந்த விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த 259 பேரும் நொருங்கி வீழ்ந்த லொக்கர் பீக் கிராமவாசிகள் 11பேரும்அடங்குவர். இவ்விமானக் குண்டு வெடிப்பிற்கு லிபியாவே காரணம் என அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. இதில் சம்பந்தப்பட்டவர்களென இரு லிபிய உளவுப் படையைச் சேர்ந்தவர்களை தம்மிடம் ஒப்படைக்கும்படியும் வற்புறுத்தியும் வருகின்றன. இக்குண்டு வெடிப்பிற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என லிபியா திட்டவட்டமாக மறுத்து வருகின்றது. மேலும், லிபியப் பிரஜைகளை விசாரணைக்கு ஒப்படைக்க முடியாது எனவும் தெரிவித்தும் உள்ளது. அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் கோரும் இருவரில் ஒருவர், லிபிய உளவுப்படையின் உப தலைவரும், லிபிய அதிபர் கேணல் கடாபியின் மைத்துனரும் ஆவார்.

அடுத்ததாக 1989இல் சகாரா பாலைவனத்திற்கு மேல், பறந்து கொண்டிருக்கையில் வெடித்துச் சிதறிய பிரெஞ்சு விமானத்தில் 170 பயணிகள் இருந்தனர். இவர்கள் அனைவரும் குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டனர். இதில் நான்கு லிபியர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக பிரெஞ்சு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

### லிபிய-அமெரிக்க உறவு

லிபியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில்நீண்ட நாட்களாகவே நல்லுறவு நிகழவில்லை. தற்போதய லிபியா அதிபர் கேர்ணல் கடாபி ஆட்சிக்கு வந்தது எண்ணெய்க் கொம்பனிகளைத் தேசியமயமாக்கியதில் இருந்து உறவில் விரிசல் ஏற்பட்டது அத்தோடு, கெடுபிடிப்போர் காலத்தில் சோவியத் யூனியனின் மிக நெருங்கிய நட்பு நாடாக லிபியா இருந்து வந்தமையும் உறவு விரிசலுக்குக் காரணமாகும்.

இதை அமெரிக்கா வெளிப்படையாகத் தெரிவித்தும் வந்தது.லிபியத்தலைவர்கேர்ணல் கடாபியை உலகப்பயங்கரவாதத்தின் தலைவர் என்றும், லிபியாவின் தலைநகர் திரிப்பொலியை உலகப்பயங்கரவாதத்தின் மையம் எனவும் ஜனாதிபதி றீகன் காலத்தில் அமெரிக்கா வர்ணித்தது. அத்தோடு, 1986இல், லிபியாவின் தலைநகர் திரிப்பொலியில் உள்ள கேர்ணல் கடாபியின் மாளிகை மீது குண்டு வீச்சுத் தாக்குதலையும் நடத்தியது. லிபிய அதிபருக்கு இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் லிபிய அதிபரின் வளர்ப்பு மகள் கொல்லப்பட்டார்.

## உலகில் தனித்து விடப்பட்ட நிலையில் லிபியா

இந்நிலையில் லொக்கர்பீக் விமானக் குண்டு வெடிப்பிற்கான குற்றச்சாட்டை பிரிட்டனும், அமெரிக்காவும் இணைந்து லிபியா மீது சுமத்தி வருகின்றன. லிபியாவின்மீது பொருளாதார தடைவிதிக்க வேண்டும். லிபியாவின் எண்ணெயை உலக நாடுகள் கொள்வனவு செய்வதை ஐ. நா. மூலம் தடுக்க வேண்டும். லிபியாவிற்கு விமான உதிரிப் பாகங்களை விற்பனை செய்யக் கூடாது. விமானப்போக்குவரத்தை தடைசெய்ய வேண்டும் என சர்வதேச நாடுகளை இந்நாடுகள் கோரி கோரிவந்தன.

இதன் முதல் கட்டமாக கடந்தவாரம் லொக்கர்பீக் விமானக் குண்டு வெடிப்பிற்குக் காரணமான இருவரையும், ஐ நா.சபையிடம் ஒப்படைக்கும்படி பாதுகாப்புச் சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பிரிட்டன் அமெரிக்கா பிரான்ஸ் என்பன இணைந்து கொண்டுவந்த இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

### லிபியா கோரிக்கை நிராகரிப்பு

ஐ நா. பாதுகாப்புச் சபையில் லிபியாவிற்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படும் முன்னரே பொருளாதாரத் தடை,இராணுவ நடவடிக்கை கொள்ளப்படலாம் என அஞ்சிய லிபியா மூன்றாம் உலக நாடுகளின் மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என கடந்த வருடத்தின் பிற்பகுதியில்கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கையை கடந்தவருடம் நவம்பர் மாதம் ஈரானின் தலைநகர் தெகிரானில் நடைபெற்ற மூன்றாம் உலக நாடுகளின் 77 குழுக்கூட்டத்திலும் லிபியா முன்வைத்தது.ஆனால் லிபியாவின் கோரிக்கையை ஆதரித்து தீர்மானம் எதுவும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப் படவில்லை.

கடந்த வருட ஆரம்பத்தில் வளைகுடாவில் யுத்தமேகம் சூழ்ந்த போதும், யுத்தம் தொடங்கிய பின்னரும், மூன்றாம் உலகநாடுகள் போரை நிறுத்தவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் முயற்சித்தன. முயற்சிகள் தோல்வியாக இருப்பினும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால். வருட இறுதியில் லிபியா வைத்தகோரிக்கையைகுறித்து மூன்றாம் உலகம் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

லிபியாவின்வேண்டுதல்கருத்திற் கொள்ளப்பட்டது என்று மட்டுமே ஈரானின் வர்த்தக மந்திரி தெரிவித்தார். 77 குழுவிலுள்ள 128 நாடுகளின் அங்கத்தவர்கள் சிலர் லிபியாவிற்கு அநுதாபம் தெரிவித்ததுடன் நிறுத்திக் கொண்டனர். மேற்கொண்டு அதை ஓர் விவகாரமாக்க எவரும் விரும்பவில்லை.

### ஆதரவு திரட்ட லிபியா தீவிரமுயற்சி

லிபியாவிற்கு எதிராக மேற்குலகம் தீவிர போக்கை மேற்கொள்ளத் தொடங்கியுள்ள வேளையில் லிபியா ஆசிய நாடுகளுக்கு நேரடியாகச் சென்று ஆதரவு தேட முற்பட்டது. அதிபர் கேணல் கடாபிக்கு அடுத்த நிலையில் உள்ள பிரதித்தலைவர் ஜல் ஆட் லிபியாவிற்கு ஆதரவு தேடி தெற்கு தென் மேற்கு கிழக்கு ஆசியநாடுகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இவரது பயணத்தில் சீனா ஈரான், பாகிஸ்தான், இந்தியா என்பன முக்கியமானவையாகவுள்ளன. இதில் சீனா ஐ. நா. வில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட நாடாகும். இந்தியா பாதுகாப்பு சபை உறுப்பு நாடாகும்.

ஆனால்,இதில்சீனாவிடமும், இந்தியாவிடமும் இருந்தும் பெரிய ஆதரவைப் பெற்றுக் கொண்டதாக இல்லை. சீனா கடந்த வருடம் இடம்பெற்ற வளைகுடாப் போரின்போது உலகப் பிரச்சினையில் தலையிடாது ஒதுங்கியிருந்தது. அதேபோன்று தற்பொழுதும் லிபியாவிற்கு ஆதரவாகத் தலையிட்டு அமெரிக்காவுடன் முரண்பாட்டைத் தேடிக் கொள்ளும் நிலையில் சீனா இல்லை. எதிர்காலப் பொருளாதாரவளர்ச்சி ஒன்றே சீனாவின் குறியாகவுள்ளது.

இந்தியாவிடம் இருந்தும் லிபியாவிற்கு பெரும் ஆதரவு கிட்டும் என்பதற்கில்லை. இந்தியா தற்பொழுது பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. மேற்குலகத்திடமிருந்து பெருமளவு கடனையும் மூலதன உட்பாய்ச்சலையும் எதிர்பார்த்துள்ள இந்தியா மேற்கிற்கு எதிரானதொரு கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

அத்தோடு, வளைகுடாப் போரின்போது, இந்தியா கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையும், அதற்கு ஏற்பட்ட பாரிய தோல்வியும் அது குறித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எழுந்த விமர்சனங்களும் தற்பொழுது இந்தியாவைபாதுகாப்புச்சபையில் மௌனமாக இருக்க வைத்தது.

மேலும், அமெரிக்காவுடன் இராணுவ ரீதியில் ஒத்துழைப்பிற்கு முன்வந்துள்ள இந்தியா அவற்றை முறித்துக் கொண்டு ஆதரவை லிபியாவிற்கு வழங்கப்போவதில்லை.

### லிபியாவின் விட்டுக்கொடுப்பு

இதேவேளை லிபியா இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக காஷ்மீர் தொடர்பாக தான் கடைப்பிடித்த கொள்கைக்கு இந்தியாவிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டது.அதாவது விட்டுக்கொடுப்புக்களைச் செய்தாயினும் ஆதரவைத்திரட்ட லிபியா முயற்சித்து வருகின்றது. ஆனால், அதனால் பயனெதுவும் ஏற்படப்போவதில்லை. சுருக்கமாகக் கூறின் இந்தியா இதுவரை தான் கடைப்பிடித்து வந்த பல கொள்கைக்கு முழுக்குப் போட்டுள்ளது. இஸ்ரேலுடன் நெருங்கிய இராஜதந்திர உறவைப் பேணும் அளவிற்கு இந்தியா வெளியுறவுக் கொள்கை மாற்றமடைந்துள்ளது. இந்நிலையில் லிபியா இந்தியாவிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில் அர்த்தம் எதுவுமில்லை.

### புதிய அரசியல் ஒழுங்கு நோக்கி உலகம்

லிபியாவிற்கு எதிரானபாதுகாப்புச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமையானது உலகம் அமெரிக்காவின் புதிய அரசியல் ஒழுங்கை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையே காட்டியது.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்த போது பாதுகாப்புச் சபையில் ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டபோது பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்த இந்தியா, கியூபா, யேமன் போன்ற நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன, சீனா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டது. ஆனால், தற்பொழுது லிபியாவிற்கு எதிராக ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியபோது சகல பாதுகாப்புச்சபை அங்கத்துவ நாடுகளும் மௌனமாக இருந்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் கோரிக்கைக்குச் சாதகமாக வாக்களித்துள்ளன. பாதுகாப்புச் சபைக்கு வெளியில்கூட ஈரானைத்தவிர வேறு எந்த நாடும் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களைக் கண்டனம் செய்யவில்லை, லிபியாவிற்கு ஆதரவாகப் பேசவில்லை.

அதாவது உலக நாடுகள் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் விரும்பியோ அன்றி விரும்பாமலோ புதிய உலக அரசியல் ஒழுங்கை ஏற்க வேண்டி வந்துள்ளது.

வளைகுடாப் போரின்போது புதிய அரசியல் ஒழுங்கின் பலத்தைப் புரிந்து கொள்ளாத இந்தியா போன்ற நாடுகள் சில புதிய ஒழுங்கினுள் செல்லாமல் பழைய நிலையிலேயே இருந்துவிடலாமெனக் கருதின. ஆனால் வளைகுடாப் போரில் ஈராக் தனித்து விடப்பட்டதும், அதனால் ஏற்பட்ட பாரிய இழப்புக்களும் சோவியத்யூனியனின் சிதைவும், மீளமுடியாத உள்நாட்டு அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் அமெரிக்காவின் தலைமையை ஏற்று புதிய அரசியல் ஒழுங்கிற்குள் செல்வதைத் தவிர்க்க முடியாததாகி விட்டது. இந் நிலையில் அமெரிக்காவால் விரும்பப்படாத லிபியா போன்ற நாடுகள் தனித்துவிடப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். அமெரிக்கா தேவை எனக் கருதினால் லிபியாமீது இராணுவ நடவடிக்கை எடுத்தாலும் எவரும் எதையும் செய்துவிடப்போவதில்லை.

- ஜெயராஜ் -

அமெரிக்காவின் தலைமையிலான புதிய அரசியல் ஒழுங்கிற்கு உலக நாடுகள், குறிப்பாக மூன்றாம் உலகநாடுகள் இசைவாக்கம் பெற்று வருகின்றன. புதிய உலக ஒழுங்கில் இருந்து விலகியிருக்கலாம் என எண்ணிய நாடுகளுக்கு வளைகுடாப் போரில் ஏற்பட்ட கசப்பான இராஜதந்திரத்தோல்வியும் சோவியத்யூனியன் திடீர்ச்சரிவும் அவர்களை புதிய ஒழுங்கு நோக்கித் தள்ளியுள்ளன. இப்புதிய ஒழுங்கை ஏற்காதவர்கள் தனித்து விடப்படலாம்; சிலவேளை, தாக்குதலுக்கும் உள்ளாகலாம்.

# அஜர்பையான் ஹெலியை ஆர்மேனியர்சுட்டுவீழ்த்தினர்

ஆர்மேனிய தீவிர வாதிகளால் அஜர்பையானில் உலங்கு வானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதால் அதில் பயணம் செய்த 40பேர் பலியாகியுள்ளனர். இதில் பலியானவர்கள் அனைவரும் பொதுமக்கள் என அஜர்பையான் அதிபர் மாளிகையிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன

அஜர்பையானில் ஆர்மேனியர்கள் அதிகம் வாழும் பகுதியொன்றில்வைத்து ஏவுகணைகளின்மூலம் இந்த உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஒரு வீதி பிரித்ததால் நிவாரணம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடி முகத்துவாரம் பகுதிகள் இரண்டு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவையாகும் இவ்விரு கிராம சேவகர் பிரிவுகளையும் ஒரு வீதியே பிரிக்கின்றது.

ஆனால் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு வழங்கப்பட்ட வெள்ள நிவாரணம் மற்றப் பிரிவுக்கு இதுவரை வழங்கப் படவில்லை. இது தொடர்பாக திருச்செந்தூர், கல்லடி. முகத்துவாரம் டச்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கம் என்பன மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளது

## சுமன், வினோத் நினைவு விழா

(வடமராட்சி கிழக்கு)

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் இணைந்து தம் உயிர்களை அர்ப்பணித்த வீரவேங்கைகள் சுமன், வினோத ஆகியோரை நினைவு கூருமுகமாக மாபெரும் நினைவுவிழா வடமராட்சி கிழக்கு நாகர் கோயிலில் இன்று (31-1-92) நடைபெறவுள்ளது.

கடற்புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நினைவு விழாவில் நினைவுரைகளைத் தொடர்ந்து சலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## கட்டுப்படுத்தப்படா விட்டால்

# சிங்களவரை தொண்டமான் சிறுபான்மை ஆக்கி விடுவார்

### - சிறிவிமால தேரோ

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் பட்டாலன்றி சிங்கள மக்கள் உதவியற்ற சிறுபான்மையினராவதைத் தடுக்க முடியாது என்று கெட்டம்பே விகாராதிபதி கெப்பிட்டிகொட சிறிவிமால தேரோ கூறியுள்ளார்.

கெட்டம்பே பகுதியிலுள்ள விகாரையொன்றில் ஆரம்ப பாடசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் ஒரு சிங்களவர் கூட அமைச்சர் தொண்டமானின் யோசனைக்கு எதிராக கருத்து தெரிவிக்காமை குறித்து கவலை வெளியிட்டார். இந்த திறப்பு விழாவில் பேராதனை பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி.எம். குணதாசா, தலதா மாளிகையின் தியவதனநிலமே நிரஞ்சன் விஜியரட்ணா, பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆனந்த குலசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சீருடை அணிந்தவர்கள் ஊவாவில் கொள்ளை

ஊவாப் பகுதியிலுள்ள தோட்டங்களில் சீருடை அணிந்தவர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இது பற்றி அமைச்சர் செல்லச்சாமி சிறிலங்கா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

## மகிந்த ராஜபக்ஷாவின் பாத யாத்திரை

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களைப் பகிரங்கமாகக் கண்டனம்செய்துவரும் சுதந்திரக் கட்சி எம். பியான மகிந்த ராஜபக்ஷா எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி முதல் பாத யாத்திரை ஒன்றைத் தொடங்கவுள்ளார். இப்பாத யாத்திரை அரசின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதாக அமையும் எனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் எனவும் ராஜபக்ஷா கோரிக்கை விடுத்துள்ளார்.

## இந்தியாவிற்கு உதவிவழங்க புஷ் நிதி கோருகின்றார்

(வாஷிங்டன்)

1993 ஆம் ஆண்டின் நிதி ஆண்டிற்காக இந்தியாவிற்குப் பன்னிரண்டு கோடியே எழுபது லட்சம் டொலருக்கும் அதிகமான பண உதவி வழங்குவதென அமெரிக்கா யோசனைசெய்துள்ளதென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

இது குறித்து ஜோர்ஜ் புஷ் அமெரிக்க காங்கிரஸிடம் உதவி கோரியுள்ளார். இதில் இரண்டு கோடியே நாற்பது லட்சம் டொலர் வளர்ச்சி உதவிக்கு எனவும் சத்துணவுத் திட்டம், அவசர மனிதாபிமான உதவி இவற்றுக்கென ஏழு கோடியே எழுபது லட்சம் டொலரும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஜோர்ஜ் புஷ் காங்கிரஸிடம் தெரிவித்தார். இதனைவிட சர்வதேச இராணுவக் கல்வியின் கீழ் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் உதவி ஒனறுக்கும் புஷ் யோசனை தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 1993 ஆம் ஆண்டுக்கான பாகிஸ்தானிய உதவிகளுக்கென ஜோர்ஜ் புஷ் எந்த வித யோசனைகளையும் காங்கிரஸிடம் தெரிவிக்கவில்லை. முதல் தடவையாக இம்முறையே அவர் பாகிஸ்தானுக்கு ஆதரவாக யோசனை எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காவல்துறையில் பெற்றுக் கொள்ளவும்

29-01-92 காலை வேம்படிச் சந்திக்கு அண்மையில் வீதியில் ''பெண்கள் கைக்கடிகாரம்'' ஒன்றும்,

27-01-92 காலை காங்கேசன் துறை வீதி யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக இலட்சுமி என்பவருடைய 'மணிப்பேர்ஸ்' ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்களின் உரிமையாளர்கள் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளரை நேரில் சந்தித்து தகுந்த ஆதாரம் காட்டி பொருள்களைப் பெற்றுச் செல்லுமாறு தமிழீழக் காவல்துறை செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## சந்தனக்காடும் எழுச்சிப் பாடல்களும்

[உரும்பராய்]

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் திறந்த வெளிஅரங்கில் நாளை 'சந்தனக்காடு நாடகமும், எழுச்சிப் பாடல் நிகழ்ச்சி இசைக்குழுவினராலும் நடாத்தப்படவுள்ளதாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். அனைவரையும் இந்நிகழ்ச்சியைக் கண்டு களிக்குமாறு அழைத்துள்ளனர்

## ஐ. நா. அதிகாரிகள்

கடந்தகால நடவடிக்கைகள் பற்றியும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், இப்பகுதிகளில் வாழும் இடம் பெயர்ந்த மக்களின் நிலைமை தொடர்பாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்வர்.

இக்குழுவினரின் யாழ்ப்பாண விஜயத்தைத் தொடர்ந்து இக்குழுவினர் சிறிலங்கா அரச உயர் அதிகாரிகளுடனும் புனர்வாழ்வு அமைச்சுடனும் இப்பகுதி நிலைமைகள் பற்றி பேசுவார்கள் என தெரியவருகின்றது.

இதைத் தொடர்ந்து இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டு இந்த ஸ்தாபனத்தின் ஜெனிவாவில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## நீதிபதிகளாக முஸ்லிம் பெண்கள்

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக இரு முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாக நியமனம் பெற்றுள்ளனர். கல்முனை சார்ந்த மருதுவைச் சேர்ந்த செல்வி ஏ. எல். எம். பைமூளா, செச்கிராவ மாஜிஸ்திரேட் நீதிபதியாகவும், திருமதி எஸ். டி. ஏ. தாஸிம் அவிசாவளை மாஜிஸ்திரேட் நீதிபதியாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

### மீனவர்

வர்கள் மீது கலிபர் தாக்குதல் நடத்துவதை தொடர்கதையாகச் செய்து வருகின்றனர்.

நேற்று (30-01-92) அதிகாலை 12.15 மணியளவிலும் குடாக்கடலில் கடல் தொழிலில் ஈடுபட்டுநின்ற மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் தெய்வாதினமாக எவரும் தாக்குதலுக்கு உட்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று (30-01-92) அதிகாலை 1.30 மணியளவில் கேரதீவுப் பகுதியில் விசைப்படகில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. (21)

### படுகொலை

என்றும் தெரிவிக்கப்படுகிறது.

67 பேர் கொலையுண்டார்கள் என்று சொல்லப்படுவது கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் 67 ஐயும் வைத்து எடுக்கப்பட்ட கணக்கே தவிர வேறொன்றும் இல்லை என்று கொக்கட்டிச்சோலை கிராமவாசிகள் தெரிவிப்பதாக பி.பி.ஸி. கொழும்பு நிருபர் தெரிவிக்கின்றார்.

வெறிபிடித்துப் படுகொலைகளைச் செய்த படையினரைக் கட்டுப்படுத்தத் தவறிய மூத்த இராணுவ அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவுமே தெரியவில்லை என்று கூறப்படுகின்றது.

இப்போது உள்ள அச்சம் எதுவென்றால்சிறிலங்கா இராணுவத்தின் அடிமட்டத்தில் ஒழுங்கீனங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. கொக்கட்டிச்சோலையில் நடந்தது போல் மேலும் சம்பவங்கள் பல நடக்காது என்று எப்படிச் சொல்ல முடியும்?என்று பி.பி.ஸி. கேட்கிறது.

### கொக்கட்டிச்சோலை

டப்பட்டன என்றும் விசாரிணைக்குழுவின் அறிக்கை தெரவிக்கிறது.

ஆனால் குழுவின் முன்னால் லெபடினன்ட் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் அளித்த சாட்சியத்தில் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்குமிடையில் துப்பாக்கிச்சண்டை நடந்துகொண்டிருந்தது; அதனால்தான் அப்படி நடந்தது என்று கூறினார். இவர் சததியப் பிரமாணம் செய்யாமல் சாட்சியமளித்ததால் விசாரணைக்குழு இவர் கூறியதை ஏற்றுக்கொள்ளவில்லை,

மேற்படி நபர் கூறியது போன்று சண்டை, அல்லது இரு தரப்பினருக்குமிடையில் துபபாக்கிச் சமர் நடந்தது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று ஆணைக்குழுவின் அறிக்கை திட்டவட்டமாகக் கூறுகிறது.

இந்தச் சம்பவத்திலிருந்து தபபிட்பிழைத்தவர்கள் விசாரணைக் குழுவின் முன் சொல்லிய சாட்சியங்களிலிருந்து உண்மையில் நடந்தது என்ன என்பது தெரியவந்துள்ளது.

புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி இருபடையினர் கொலையுண்டார்கள். இதனால் சக இராணுவத்தினர் கண்டபடி சுட்டுப பழிதீர்த்துக் கொண்டார்கள். 67 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

### மலையகத்

அண்மையில் ஹஸ்துமுல்லைப் பகுதியைச் சேர்ந்த இரு சிறுவர்களைப் பாணந்துறைக்கு கடத்திவந்து விற்றபோது ஒருவர் பொலிஸாரிடம் அகப்பட்டதையடுத்துமேற்படி விபரங்கள் வெளிவந்துள்ளன.

### பழி

விசாரணைக் குழு வெளியிட்ட இடைக்கால அறிக்கையின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விசாரணைக்குழு முழு அறிக்கையை விரைவில் கையளிக்கும் என்றும், இதனடிப்படையில் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்என்றும் அரசு தரப்பில் கூறப்படுகிறது.

இந்தப் படுகொலைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்படும் இராணுவ உயர் அதிகாரியும் மற்றும் நான்கு இராணுவத்தினரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைக் குழு முழுமையான அறிக்கையைச் சமர்ப்பித்ததும இராணுவ நீதிமன்றம் விசாரித்துக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் என்றும் கேர்ணல் முனசிங்கா கூறியுள்ளார்.

மேலும் இராணுவத்தினர் கோபத்தில் படுகொலை செய்தார்கள் என்று குறிப்பிடும் இந்த இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அமைச்சரவையில் சமர்ப்பித்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெவிக்கின்றன.

### தீவிரமாகி

மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான துணிகரத்தாக்குதல், தமதுகணிப்பீட்டில் தவறுள்ளதென்பதைஉணர்த்தியுள்ளதாகத் தெரிகின்றது. இதனால் கிழக்கின் போர்முறைத் தந்திரங்களை மீளாய்விற்கு உட்படுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகிறது.

இதேவேளை ஆனையிறவிலும், மணலாற்றிலும் இரண்டு மாதங்களாக நடைபெற்ற பெரும் போர்களில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களால் புலிகள் தாக்கும்திறனை இழந்துள்ளதாகக்கணிப்பிட்டு யாழ் குடாநாட்டின் மீது பெரும் தாக்குதலுக்குத் தயாராகி வந்த சிறிலங்கா இராணுவ தரப்பினர் தற்பொழுது புலிகள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான துணிகரத் தாக்குதலினால் இத்தாக்குதல் திட்டம் குறித்து பெரிதும் குழப்பநிலை அடைந்துள்ளதாகவும், யாழ். குடாநாடுமீதான தாக்குதலுக்கு முன்னர் வகுத்திருந்த யுக்திகளை இனிமேலும் மேற்கொள்ளலாமாஎன்பதுகுறித்து மீள்பரிசீலனை செய்வதாகவும் தெரியவருகிறது.

### ஜே. ஓ. சி.

மற்றும் சுடுபடைக் கலன்கள் வைத்திருந்தது போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பொலிசார் கோரிப் பெற்றுள்ளனர். அத்துடன் இந்த வழக்குத் தொடர்பாக பொட்டு அம்மான் என்பவரைத் தேடி வருவதாகவும், தமிழகத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் ரவி என்பவரைக் கொழும்புக்கு அழைத்துவர முயற்சிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

### சைக்கிள்

சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்றுக் காலை சிறிலங்கா பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரண்டுபேர் பலியாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கல்முனையில் நடைபெற்றதாக தெரியவருகின்றன. அங்கு இடம் பெற்ற குண்டு வெடிப்பில் இரண்டு பொலிசார் காயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா

திரு. பீற்றர் எல்மட் பேத் மகிழவெட்டுவான் கிராம மக்கள் முன்னிலையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

உண்மை நிலையை கனடா அரசாங்கத்தின் மூலம் சிறிலங்கா அரசிற்கு எடுத்துச் சொல்ல எம்மாலான அனைத்தையும் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த கனேடிய மனித உரிமைகள் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் மட்டக்களப்பு அரச அதிபரையும், ஏனைய உத்தியோகத்தர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தினர். பின்னர் மகிழத்தீவு கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் படுகொலைக்குள்ளானவர்களின் குடும்பங்களைச் சந்தித்து விபரங்களை அறிந்து கொண்டனர்.

மூன்றுநாள் விஜயத்தின் போது மக்களின் பல்வேறு துன்பங்களையும் தாம் அறிந்து கொண்டதாகவும். இங்குள்ள தமிழ் மக்கள் பூரண உரிமைகளை வழங்கக்கூடிய நிரந்தர தீர்வொன்றையேவிரும்புவதை தாங்கள் உணர்ந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் காணாமல் போனோர் கொலையுண்டோர் விபரங்களையும் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள இந்த விஜயம் உதவியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### பலவத்த

வுமில்லாமலும், குறிப்பிட்டுக் கூறக்கூடிய குற்றச்சாட்டு எதுவுமில்லாமலும் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் விடுதலை செய்யும்படி அல்லது வழக்குத்தாக்கல் செய்யும்படி இவ் இளைஞர்கள் கோரிக்கை விடுத்தே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர் எனவும் இவ் வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

### இரத்தினபுரி

இப்பகுதியில் எந்த அசம்பாவிதச் சம்பவங்களும் இடம் பெற அனுமதிக்கக் கூடாது என சூளுரைத்திருக்கும், இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் சுப்ரீன்டன் இது பற்றி பெருந்தோட்டங்களின் துரைமார்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களோடும் தொடர்பு கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'